திராவிடன்

ஆசிரியர்: என்.வி.நடராசன

ஏடு : 8 18-3-55 வெள்ளி 14 பக்கம் விலை 3 அணா மலர் : 32

தி. மு. க.—கிளைகளின் தேர்தல்

●

தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி சென்னை, செங்கற்பட்டு, தென்ஆற்காடு, வடஆற்காடு, சேலம், கோவை, தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம், நெல்லை, நாஞ்சில், கேரள, ஆந்திர, கர்னாடகப் பகுதிகளிலுள்ள — சிற்றூர், பேரூர், (சென்னை மாவட்டத்தில் டிவிஷன்) கிளைகளின் செயற்குழுவையும், மாவட்டப் பிரதிநிதிகளையும தேர்ந்தெடுக்க 27-3-55 ஞாயிறன்று தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

ஐந்தாண்டுத் திட்டத்தில் வடக்கும் - தெற்கும்

உலகில் சுதந்திரம் பெற்ற நாடுகள் —தங்களின் பொருளாதார அரசியல் துறைகளில், அசைக்க முடியாத அஸ்திவாரமிட்டு வளர்ந்து வருகின்றன. உறங்கிக் கிடந்த சின்னஞ்சிறு நாடுகள் கூட அகில உலக விவகாரங்களில் இடம்பெறவும் அதேபோன்று உலக மார்க்கெட்டுகளில் நேரடியான பேரம் பேசவும் உரிமை பெற்று விளங்குகின்றன.

உதாரணமாகக் கூறவேண்டுமானால், 80 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கை—வியாபாரத் துறையில் உலகில் எந்த சர்க்காருடனும் நேரடி தொடர்பு கொள்ளலாம், இலங்கையின் தொழில் முன்னேற்றத்தில் இலங்கை சர்க்காருக்கே முழுஉரிமை யிருக்கிறது. இலங்கை மக்களால் செலுத்தப்படும் எல்லாவிதமான வரி வருவாய்கள் இலங்கை சர்க்காருக்கு உரிததானதேயன்றி அதிலே சரிபகுதியோ அல்லது குறைந்த அளவோ எடுத்துச் செல்ல உலக வல்லரசுகளுக்குக்கூட அதிகாரங் கிடையாது. அதுமட்டுமா! உலக விவகாரங்களைப்பற்றிப் பேசும் பொதுச் சபைகளிலும் இலங்கைக்கு இடமுண்டு சுதந்திரம் பெறுவதற்கு முன்பிருந்த இலங்கையின் நிலைக்கும் இன்று தொழில்—பொருளாதாரத் துறையில் தலைநிமிர்ந்துள்ள தன்மையையும் அரசியல் யூகம் படைத்தவர்கள் மனதார ஒப்புக்கொள்வர். இலங்கை மட்டுமல்லாமல் உலகிலுள்ள சின்னஞ்சிறு நாடுகளும் இவ்வித சுதந்திரத்துடன் இயங்கி அந்தந்த நாட்டு மக்களை வாழவைக்க முயற்சி செய்கின்றன.

ஆனால் 1947-ம் ஆண்டு சுதந்திரம் பெற்றஇந்தியாவிலே நமதுநிலை என்ன? இதனை நாட்டுப் பற்று கொண்ட ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமல்லவா!

இலங்கை போன்ற நாடுகள் தனி உரிமை பெற்றிருப்பதால், அந்நாட்டைப் பற்றிய வளர்ச்சியில் பொறுப்பும் கவலையும் கொண்டு ஆவன செய்துவருகின்றன, நாம் பெற்றுள்ள சுதந்திரமோ மொழித் துறையிலிருந்து பழக்கவழக்கம், பண்பு கலாச்சாரம், நாகரீகம் உணவு; உடை ஆகிய அனைத்திலும் வேறுபாடும், ஒட்டி வாழமுடியாத அமைப்பிலுமுள்ள மக்களை—மக்களைக் கொண்ட நாடுகளை ஏக இந்தியா என்ற பேரால் ஆட்சி செய்வதும் அந்த அரசியல் பிடிப்பைக் கைப்பற்றியுள்ளவர்கள், தாங்கள் வாழும் பகுதிகளை வளப்படுத்தி மற்றப் பகுதிகளை மார்க்கெட்டாக ஆக்கி ஏகாதிபத்திய கைவரிசையைக் காட்டுவதுமான இழிந்த நிலைதான் எழெட்டு ஆண்டுகளாக வளர்ந்து வருகிறது.

சுயராஜ்யம் கிடைத்த இந்த எட்டு ஆண்டுகளில் இந்தியத் துணைக் கண்டத்தில் வடநாட்டிலே நிறைவேற்றப்பட்ட அணைக்கட்டுத் திட்டங்கள், [illegible] துவக்கப்பட்ட தொழிற்சாலைகள் மற்ற உரிமைகளையும்—அதே சமயத்தில் தென்னாடு இத்துறைகளில் புறக்கணிக்கப்பட்டுவரும் ஓரவஞ்சனையையும் அனைவரும் கூர்ந்து கவனிக்க வேண்டுகிறோம்

சென்னை சர்க்காரின் இவ்வாண்டு வருமானம் 46 கோடி ரூபாயென்றும் செலவு 49 கோடியாக யிருக்குமென்றும், எனவே துண்டு விழும் 3 கோடியை புதிய வரிகளை விதித்துச் சமாளிப்பதென்றும் சென்னை சர்க்கார் தங்கள் வரவு செலவு விவரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் (நம் மாநிலத்திலிருந்து) வருமான வரி, புகையிலை வரி, கலால்வரி, சுங்கவரி ஆகிய இனங்களின் மூலமாக ஏறத்தாழ 45 கோடி ரூபாய் வரை இந்திய சர்க்கார் வசூலித்துச் செல்லுகின்றனர். வெள்ளையர் ஆட்சியிலிருந்த இந்த ஏகாதிபத்திய முறை சுதந்திரம் பெற்ற பின்னரும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களிலிருந்து விலக்கப்படவில்லை,

இப்படி வசூலித்துச் செல்லும் நமது மாநிலத்தின் பெருஞ் செல்வத்தை நம் மாநில மக்களின் வாழ்வை நிலைபெறச் செய்யும் காரியங்களுக்காக செலவழித்தார்களானால் நாம் குற்றம் கூற முடியாது, ஆனால் நடைமுறையில் காண்பதென்ன?

சுதந்திரம் கிடைத்தவுடனே டெல்லி ஆட்சியாளர் ஐந்தாண்டுத் திட்டம் என்ற பேரால் வடநாட்டிலே தொழில் துறையை வளர்த்து அதற்கான பாதுகாப்பு அளிக்கும் வகையில் பெரிய பெரிய நீர்ப்பாசன திட்டங்கள், அணைக் கட்டுகளை நிறுவியுள்ளனர். அதேசமயம் தென்னாட்டில் ஏதோ பெயரளவுக்கு இரண்டொரு சாதாரண திட்டங்களை நிறைவேற்றி யிருக்கின்றனர். இந்த ஓரவஞ்சனையை அன்றே திராவிட முன்னேற்றக் கழகம் கூறியபோது—வடநாடு—தென்னாடு என்று பேசுவதோ அல்லது நேரு சர்க்காரைப்பற்றி குறை கூறுவதோ அர்த்தமற்றதும் அரசியல் விவேகமில்லாததுமான கூப்பாடுஎன்று தேசியத் தலைவர்களே சீறிவிழுந்தனர்.

இன்று அதே தேசியத் தலைவர்களும் நாட்டை ஆளும் அமைச்சர்களும் ஐந்தாண்டுத் திட்டத்தினால் தென்னாடு ஏமாற்றமடைந்துள்ள அவல நிலையை விவரித்து டெல்லி ஆட்சி பீடத்தினருக்கு எச்சரிக்கை விடுவதைக் காண்கிறோம்

தென்னாட்டுக்குத் தனிஉரிமை என்றிருந்தால் நம் நாட்டின் ஆண்டு வருமானம் குறைந்தது 100 கோடி ரூபாயாகவும் செலவு 50 கோடி யென்றாலும் மிகுதி ஆண்டொன்றுக்கு 50 கோடி யிருக்குமல்லவா! அதுமட்டுமல்லாமல், இங்குள்ள இயற்கை வளப்பத்தைப் பயன்படுத்த உலக நாடுகளின் நேரடியான உதவியோ அல்லது கடனோ பெறவும், அதுபோலவே நம் நாட்டின் விளை பொருளின் மிகுதியை பிறநாடுகளில் நேரடி வியாபாரம் செய்யும் உரிமையும் இருக்குமல்லவா! இந்தியாவுடன் ஒட்டிக்கொண்டிருந்த சின்னஞ்சிறு நாடான இலங்கை அவ்வுரிமையுடன் வாழும்போது திராவிடத்தைப் பொறுத்தவரை $7\frac{1}{2}$ கோடி மக்களும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கணக்கிட்டாலும் $2\frac{1}{2}$ கோடி மக்களையும், இயற்கை வளப்பத்தையும் கொண்ட நம்நாடு இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மற்ற நாடுகளைவிட செழுமையுடன் வாழ முடியாதா என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு தென்னாட்டுத் தேசியத் தோழர்களை கேட்டுக் கொள்கிறோம்.

நம் மாநிலத்திற்குள்ள உரிமையை வேறிடத்திலே குவித்து வைத்துவிட்டு ஒவ்வொரு பிரச்னைக்கும் பிறரை எதிர்பார்ப்பது இன்றைய காலநிலைக்கு ஏற்றதுதானா! இவ்வித "மாதிரி இரட்டை ஆட்சி"யில் மாநில சர்க்காரை எந்தக் கட்சி நடத்திச் சென்றாலும் மக்களுக்கோ பொதுவாக நாட்டுக்கோ நன்மை பயக்க முடியுமா! எனவேதான் வடநாட்டு ஆதிக்கப் பிடியிலிருந்து திராவிடம் தனிஉரிமை பெற வேண்டுமென்று கூறுகிறோமே யல்லாது திராவிடத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினரே ஆளவேண்டும் என்ற பதவி மோகத்தால் அல்ல.

தென்னாடு தனிஉரிமை பெற்று இயங்குமானால் வடநாடு—தென்னாடு பிணக்குகள் மேலும் வளராமல் ஒருவரையொருவர் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் சூழ்நிலையின்றி நேசப்பான்

11-ம் பக்கம்

"பால்காவடி தயாரிக்கிறது!"

சித்திரைத் திங்கள்—முதல் நாளன்று சென்னை அமைச்சர் பக்தவத்சலம் "மக்களே பால் அருந்துங்கள்" என்ற பிரசாரத்தைத் துவக்கப் போகிறாராம்! இதைக் கேள்வியுற்ற மாஜி மரம் நடுவிழா மந்திரி முன்ஷி முணுமுணுப்பதாகச் சொல்லப்படுகிறது!

முன்பு:-

பாதையிலே பாவையைச் சந்திக்கிறான் சேகர். வனஜாவுக்கோ தன் வாழ்வுக் கதையின் கதாநாயகனைச் சந்தித்துவிட்டதிலே பூரிப்பு. பாலத்து வாசிக்கோ துள்ளுநடை போட்ட துடியிடையாளையும் ரயில் பிரயாண பிரமுகரையும் பார்த்து விட்டதிலே அதிர்ச்சி. புயல் புகுந்த இதயமும்—புன்னகை பதிந்த நெஞ்சும் ஒன்றையொன்று சந்தித்துக் கொண்டன,

27

பூட்டிய அறைக் கதவைத் திறந்தான் சேகர். விரித்த பத்திரிகை விரித்தபடியே யிருக்க எதையோ ஆழ்ந்து உற்றுப் பார்த்துக் கொண்டே சேகருக்குப் பின்னே நடந்தான் அந்தப் பாலத்து வாசி. உட்கார் என்று அன்பாகக் கூறினன் சேகர். வேண்டா வெறுப்போடு சாய்வுப் பலகையிலே அதிசய மனிதன் சாய்ந்தான். போட்டிருந்த சட்டையை எடுத்து ஆணியிலே மாட்டிவிட்டு சட்டைப் பையிலிருந்த துண்டுக் கடிதத்தை எடுத்துப் பார்த்தான். குண்டு மல்லிகையைக் கோர்த்து வைத்ததுபோல முகவரியை எழுதித் தந்திருந்தாள் வனஜா. உதட்டுக்கு வெளியே வார்த்தையைக் கொட்டாமல் அதைப் படித்துப் பார்ப்பதிலே அவனுக்கு ஒரு பூரிப்பு. மீண்டும் சட்டைப் பையிலேயே அந்தத் துண்டுக் கடிதத்தைத் திணித்துவிட்டு உலவிக் கொண்டிருந்தான் சேகர்,

புதுமனிதனே பத்திரிகை படிப்பதை இன்னும் நிறுத்தவில்லை. தடித்த எழுத்திலே அச்சிடப்பட்டிருந்த செய்தித் தலைப்பையே அவனது வட்டமிடும் பயங்கரக் கண்கள் படம் பிடித்துக் கொண்டிருந்தன. சிதம்பரம் கொலைச் செய்தி விரிவாக வெளியிடப்பட்டிருந்தது அங்கே. தேர்வுக்குச் செல்லும் மாணவனைப்போல திரும்பத் திரும்ப அந்தச் செய்தியைப்படித்துக்கொண்டிருந்தான். ஒரு வில்ஸூம், தீப்பெட்டியும் பத்திரிகைமேல் விழுந்ததுந்தான் அவனது கவனம் சேகரின் மீது திரும்பியது. சிகரெட்டை உதட்டிலே பதிய வைத்துக் கொண்டே தீப்பெட்டியை எடுத்தான். சேகர் புகையை ஊதிக் கொண்டே பேசிக் கொண்டிருந்தான்.

பேப்பர்லே ஒரே பக்கத்துலேயே மூழ்கிட்டியேப்பா, இன்னும் நாலுபக்கம் பாக்கி யிருக்கிறதே மறந்திட்டியாப்பா

இல்லை மிஸ்டர்! ஒரு கொலைச் செய்தி அதுதான் சுவாரஸ்யமா படித்துக் கொண்டே வந்தேன். சிறு நாவல் போல யிருக்குது. வர வர கொலை, கொள்ளை......ஓடிய கதை இதுதான் பிரதர் பத்திரிகையிலே பத்தி பத்தியா வருது. நான்சென்ஸ் இந்த எடிட்டர்களுக்கு உலக விவகாரமே புரியாதுபோல யிருக்கு.

ஏன் நீங்கள் அரசியல்வாதியோ?

அரசியல் ஸ்டண்டும் எனக்குப் பிடிக்காது பிரதர். நானொரு காரியவாதி அதாவது பிஸினஸ் மேன்.

அரசியலும்... பிஸினஸ்தானே மிஸ்டர்!



அதிலே அடிபடாத தனி மனுஷன் நான். சாதாரண 'சில்லரை' தியாகிகூட அல்ல என் உலகமே வேறு. நான் வியாபாரக் கழுகு. நாளெல்லாம் ஊர் சுற்றுபவனுக்கு ஒய்யார வேலை எதற்கு?

ஒய்யார வேலையா? அரசியல் கூடம் ஒய்வு மடமா?

சோம்பேறி மடம்னு தாராளமாச் சொல்லுவேன்.

நீ தெரிந்த அரசியல் அப்படி!

உலகுக்கெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டும் 'இந்த' அரசியலும்...அதை நடத்தும் அறிமேதைகளைப் பற்றித்தான் நாட்டுக்கு நன்றாகத் தெரிகிறதே... அதையே தான் எடுத்துப்பாரேன்.

நீ அரசியல் குற்றவாளியாகிறாய்.

அப்படித்தான் சர்க்காரும் நம்புகிறது.

நீ பிஸினஸ்மேன் என்றாய்? சர்க்கார் சந்தேகப்படுகிறது என்கிறாய் இப்போது!

பிஸினஸ் மேன் என்றால் சர்க்கார் அவன் வீட்டுக் கொல்லையிலேபூத்த முல்லைப்பூவா என்ன? ஒரே தலைவலி. ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் மாதிரி, இன்கம்டாக்ஸ், சேல்ஸ்டாக்ஸ் ஆபீஸர்களை அனுப்பி தொல்லைதரது என்ன சந்தேகப்படாத காரியமாஎன்ன? எவன் காமதேனு இருக்கானே அவனையே கடாவுறானுகளே. இப்பச் சொல்லுங்க நாங்கெல்லாம் சந்தேகப் பிராணிதானே!

புரியுது புரிரிது! ஓங்க வேதனை அப்படி.

எனக்கு மட்டுமென்ன. உள்ளதே அப்படித்தானே. சர்க்காரை நடத்த் எங்களைப் போன்றவர்கள் மூட்டை மூட்டையாக கொட்டி அழுகிறோம். அதையும் வாங்கி 'கஜானா'வை நிரப்பிக் கொண்டு எங்க கழுத்துக்கே கத்தி தீட்டுறாங்களே. புத்தி யில்லாத சோம்பேறிகள்தான் இந்த வேலையைச் செய்வதற்கு முன்னாலே நிற்குறாங்க என்பதை நினைச்சுப் பார்க்குறதுக்கே வெட்கமா யிருக்குது சார்.

சர்க்கார் உங்களை ரொம்ப விரட்டுது போலயிருக்குது!

ஆமா கடிக்காமமட்டும் விட்டு வச்சுருக்கு. என் வேதனைக்காக மட்டும் சொல்லல்லே நடப்பைப் பாருங்களேன். அரசியலையும்—அதிகாரத்தையுந்தான் திரும்பிப் பாருங்களேன். என்ன வாழுது—வளருது? உண்மையாய் நடந்ததைச் சொல்லுறேன். கேட்டால் விழுந்து விழுந்து சிரிப்பீர்கள். ஆனால் சிரித்து என்ன பயன்?

"கதை சொல்ல பீடிகை போடுகிறாய்!" என்று சொல்லிக் கொண்டே தலையணையை எடுத்து மடியிலே வைத்துக் கொண்டு கயிற்றுக் கட்டிலிலே அமர்ந்தான் சேகர். பாலத்துவாசியோ கையைச் சுட்டுவிட்ட சிகரெட்டுத் துண்டை வெளியே வீசிவிட்டு பேப்பரை மடித்து வீசிக் கொண்டே ஆர்வத்தோடு பேசத் துவங்கினான்.

..."அரசியல்வாதிகள் ஆகஸ்டுத் தனம் செய்தார்களே அந்தக் காலத்திலே ஒருநாள் போளூர் வாசியொருவர் பழனி போய் மொட்டை போட்டுவிட்டு ஊர் திரும்பினார். ரயில்வே ஸ்டேஷனில் இறங்கியதும் ஒருசிறு கூட்டம் ரயில்வே லயினை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. நடந்த சம்பவத்தைத் தெரிந்து கொள்ள இவரும் ஓடோடினார் அப்பாவி. இவருக்குப் பின்னே நாலைந்து போலீஸ்காரர்கள் துரத்திக் கொண்டு ஓடிவந்தார்கள். முன்னே ஓடியவர்கள் ஓடித்தப்பித்துக் கொண்டார்கள். எதுவும்புரியாமல் எங்கே ஓடுகிறோமென்று தெரியாது ஓடிய இவர் துரத்தி வந்த போலீஸாரிடம் சிக்கிக் கொண்டார். அடுத்து ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றார்கள். ரயில்வே போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீவைத்த கூட்டத்துக்கு தலைமை தாங்கிய குற்றச்சாட்டு அவர் தலையில் வீழ்ந்தது. அவரது 'மொட்டைத் தலையை மறைக்க இழுத்துப் போட்டிருந்த வெள்ளைக்குல்லாய்—அதுவும் சுத்தக் கதர்தான்—அவர் தலைக்கே தீம்பாக அமைந்தது. பலமுறை அழுது கூக்குரலிட்டுச் சொல்லிப் பார்த்தார்—நான் பழனிபோய் வருகிறேன். குதர்க்கக் கூட்டத்துக்கும் எனக்கும் சம்மந்தமில்லையென்று அந்த 'மானு தோழர்' கெஞ்சினார். ஒரு 'கேடி' பிடிபட்டு விட்டதிலே போலீஸாருக்குப் பூரிப்பு. அதன் பயன் மூன்று மாதங்கள் சிறைக் கம்பிகளுக்குப் பின்னே அழுது கொண்டிருந்தார் அனுதாபத்திற்குரிய 'மானு'

மூன்று மாதங்களுக்குப் பின்னே விடுதலை வந்தது அவருக்கு. அதைத் தொடர்ந்தே அடுத்த வருடமே நாட்டுக்கும் விடுதலை வந்து விட்டதாக தேசிய தப்பட்டைகள் முழங்கின. அரசியல் (அ)சிங்கங்கள் மேடையேறி கர்ஜித்தன. மானு போன்றவர்களின் முகத்திலே தியாகிப் பட்டம் ஒட்டப்பட்டது. பூமாலைக்குள்ளே முகத்தை மறைத்துக் கொண்டு வலம் வந்தனர். தேர்தல்வந்தது, யார்யாரோ போட்டியிட்டார்கள். மானுவும் போட்டியிட்டார். ஒரு தியாகி......பட்டத்தை எடுத்துவிட்டு சுயவாதியாக முழக்கமிட்டதிலே நல்ல பலன் கிட்டாமல் போகவில்லை, மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் அவை கூடியது இப்போதுதான் அவரதுசுயரூபத்தைக் காட்டத்துவங்கினார். பதவி எலும்பைத் துக்கும் கருவியானார். தேசிய முடை நாற்றச் சேற்றிலே இந்தப் புதுஓடையும் கலந்தது. தேசீய வாதியானார். முன்னர் சொன்னதெல்லாம் மறந்தார் அவர் சொல்லை நம்பியவர்களையெல்லாம் ஏமாற்றியவராக்கினார் இந்தக் கடைந்தெடுத்த துரோகத்துக்கு அரசாங்கவாதிகள் பரிசு தராமலா போவார்கள். ராஜதந்திரிகள் ஆமாம் மந்திரிகள் பீடத்தை 'மானு'வும் அலங்கரித்தார்.

கட்சி விட்டு கட்சி தாவுவது... இடம் விட்டு இடம் மாறுவது போல அவ்வளவு லகுவாகத் தானே யிருக்கிறது இந்தக் காலத்தில். வசதிப்படவில்லை யென்றால் எதையாது சாக்கு சொல்லிக் கொண்டு மாறிப்போய் விடுவது தானே பாரம்பரியமாகிக் கொண்டு வருகிறது. நேற்று இனித்தது, இன்று கசக்கிறது பலருக்கு. நேற்று தூற்றியவர்களை இன்று தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு பாதத்தை நக்கிக் கொண்டே வாலாட்டுகிறார்கள்! வாலாடினால் குதூகலமென்றுதானே அர்த்தம். அப்போ சாமிகளே! இந்த புது பிஸினஸ் சீரியலை விளக்கினால் கணேச புராணம் போல நீண்டு கொண்டேதான் செல்லும். தொந்தி படைத்த 'மானு'க்கள் நடுச்சந்தியிலே நின்றதைப் பார்த்த தப்பட்டைகள் 'ராஜாதிராஜமான்களாக' மன்னர் மக்களாக, மந்திரிகளாக வாழலாம், சுருட்டல் அகராதியை விரிக்கலாமென்று கடைக் கண் காட்டினார்கள். அந்திக் கடை திறக்கும் அலங்காரிகளைப்போல, கள்ளனுக்கு கன்னக்கோல்போல இவர்கள் — இந்த 'மானு'க்கள் போயச் சேர்ந்தார்கள். இந்த மானுக்கள் புது இடந் தேடுமுன் பழைய இடத்திலே 'பிடி' தேடிப் பார்த்தனர். 'மானு' தலைவர்

→ கண்ணாடி ←

●

கதையில் நடமாடும் உருவங்கள் 'நாம்' தானே என்று யார் யாரோ நினைத்துக் கொண்டால் அதற்கு நாம் பொறுப்பல்ல. கண்ணாடியிலே முகத்தைப் பார்த்தால் தெரியத்தானே செய்யும் உள்ள லட்சணம். உள்ளதை மாற்றிக் காட்டும் அதிசயக் கண்ணாடி அல்ல இது. நிலைமையைப் படம் பிடிக்கும் நிலைக் கண்ணாடிதான். ஆமாம்.........காலக் கண்ணாடியே தான்.

—கதாசிரியர்

உயர் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள்,

சென்னை.

கவர்னரவர்களே, நலம் வேண்டுகிறேன். தாங்கள் முன்பு ஒருமுறை சென்னையில் அரிசி கடைத் திறப்பு விழாவிலே ஆற்றிய சொற்பொழிவினை மறந்திருக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். "முன்பெல்லாம் கவர்னர்கள் இப்படி ஒரு சாதாரண அரிசி கடைத் திறப்பு விழாவிலே கலந்துகொள்ளமாட்டார்கள்; ஏனெனில் அன்றைய ஆட்சி முறையில் கவர்னருக்கு அதிக பொறுப்புள்ள வேலைகளும் அதிகாரமும் தரப்பட்டிருந்தன. சுயராஜ்யத்திற்குப்பிறகு—கவர்னர் பதவி ஏதோ ஒரு சம்பிரதாயத்துக்காக இருந்து வருகிறதே யல்லாது வேறில்லை. எல்லா வேலையையும் மந்திரிசபையே கவனித்துக் கொள்கிறது. ஆதலால்தான் நான் இதைப்போன்ற திறப்பு விழாக்களில் கலந்துகொண்டு பேசுகிறேன். எனக்குப் பொழுது போகவேண்டாமா?" என்று குறிப்பிட்டிருந்தீர்கள்.

நீங்கள் இவ்வித நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது பற்றி யான் ஒன்றும் கூறுவதற்கில்லை. கவர்னர் பதவி வகிப்பவருக்கு அதிக வேலைகள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும், மற்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று எவரும் சொல்லமுடியாது. ஆனால் அந்த நிகழ்ச்சிகளில் தாங்கள் ஆற்றும் சொற்பொழிவினைப் படிக்கும் போதுதான் எனக்குச் சிரிப்பு வருகிறது!

"முருகன் தமிழ் நாட்டுக் கடவுள் அல்ல; தென்னாட்டுப் பெண்கள் மிக அழகிகள், எங்கள் மூதாதையர் வியாபாரம் செய்து நிறைய பணம் சேர்த்து வைத்திருக்கின்றனர்." என்று இப்படிப் பேசி நகைச்சுவையை சப்ளை செய்து வருகிறீர்கள்!

சென்ற வாரம் தோழியர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு 'பத்ம விபூஷணம்' என்ற பட்டத்தை ஜனாதிபதியின் சார்பாகத் தாங்கள் வழங்கியபோது இந்தப் பட்டத்தை இவ்வம்மையாருக்கு நான் வழங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டதால் பெரும் பாக்கியம் பெற்றவனாகிவிட்டேன் என்று பேசியிருக்கிறீர்கள்,

என்ன பாக்கியம் அடைந்தீர்களோ எனக்கு விளங்கவில்லை. உண்மையிலேயே அப்படிக் கருதி தெரிவித்தீர்களா அல்லது நகைச்சுவைக்காக ஒரு போடு போட்டீர்களா என்பதும் புரியவில்லை.

இது எப்படியோ போகட்டும் தாங்கள் பதவியில் இருக்கப்போகும் மிகுதி காலத்துக்கும் இம்மாதிரியான பாக்கியங்களைப் பெறுவதிலேயே உங்கள் கவனம் அனைத்தையும் செலுத்திவிட வேண்டாம்.

தென்னாட்டு மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு சற்று துணையாய் நின்று நேரு பண்டிதர் ஆட்சியினருக்கு ஆவன எடுத்துக் கூற வேண்டுகிறேன், சென்னை மாநில மக்களுடைய வரிப் பணத்திலிருந்து ஆண்டுதோறும் ஏறத்தாழ பத்து லட்ச ரூபாய் சம்பளமும் செலவும் பெற்று வரும் தாங்கள் தங்களுக்கு மட்டுமே பாக்கியங்களைத் தேடிக் கொள்வதைச் சற்றுக் குறைத்துக் கொண்டு, தென்னாட்டு மக்களுக்கு பாக்கியங்கள் இல்லாவிட்டாலும் சாதாரண வாழ்வுக்காகிலும் வழிவகை

செய்யுங்கள். சிரமம் மன்னிக்கவும்.

அன்புள்ள
கூத்தரசன்

உயர்திரு. லால்பகதூர் சாஸ்திரி

புதுடெல்லி

ரயில்வே இலாக்கா அமைச்சரே நலம் வேண்டுகிறேன். மாதிரி சோஷலிசத்திற்கு முதல் வழிகாட்டி போல தாங்கள் நடக்க முன்வந்தது மிக பாராட்ட வேண்டியதுதான்! ஏனெனில் 150 மைல் பிரயாணம் செய்பவர்கள் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து, 4 மைலுக்கு ஒரு தம்பிடி வீதம் அதிகக் கட்டணம் தரவேண்டிய நிலைக்கு 'சோஷலிசத்தை' உயர்த்திவிட்டீர்கள் அல்லவா?

அதுகிடக்கட்டும், உங்கள் துணை அமைச்சர் உயர் திரு ஷா நவாஸ்கான் டெல்லிப் பாராளுமன்றத்தில் 10—3—55-ம் நாளன்று பேசியதைக் கவனித்தீர்களா? நாட்டுப் பிரிவினையால் நாடு கெட்டுவிடாதென்றல்லவோ அவர் பேச்சும் புள்ளி விவரமும் எடுத்துக் காட்டுகின்றன! நீங்கள் இதையெல்லாம் கவனிக்க வேண்டாமா?

லால்பகதூராரே கேளுங்கள் அவர் கூறியிருக்கும் விவரங்களை; 12 மீட்டர்கேஜ் என்ஜின்களும், 300 மீட்டர் கேஜ் வாகன்களும், சமீபத்தில் பாக்கிஸ்தானிலிருந்து கடனாகப் பெறப்பட்டன. வாகனுக்குத் தினம் 1—6—0 வீதம் வாடகையும், என்ஜின்களுக்கு அவற்றின் விலை மீது 100-க்கு 4-வீதமுள்ள வட்டித் தொகையும் 100-க்கு 3 வீதம் தேய்மான செலவும் கொடுக்க வேண்டியிருக்கிறது" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

நாடு பிரிந்தால் நாசந்தான் ஏற்படும் என்று திராவிட இயக்கத்தாருக்கு உபதேசம் செய்ய முந்திரிக் கொட்டை போல முன்வரும் பிரகஸ்பதிகளுக்கு நாங்கள் விளக்கங் கூறுவதைவிட உங்கள் இலாகாவின் துணைஅமைச்சரே தக்க அறிவூட்டியிருக்கிறார்.

பிரிவினையால், பிரிவினை பெறும் நாடுகளுக்கோ — மக்களுக்கோ நஷ்டமில்லை. ஆனால் எல்லாவற்றையும் ஏகபோகமாக ஆக்கிக்கொண்டு மற்றவர்களை அடக்கியாளும் ஆதிக்கக்காரர்களின் பேராசையில் துண்டுவிழும். இந்த உண்மையைத்தான் இந்திய சர்க்கார் ரயில்வே இலாக்காவின் துணை அமைச்சர் ஷா நவாஸ் அவர்கள் டெல்லிப் பாராளுமன்றத்தில் கூறிய பதில் எடுத்துக் காட்டுகிறது.

அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியே இதுபோன்ற பல உண்மைகளை அவ்வப்போது டெல்லிப் பாராளுமன்றத்தில் நீங்களும் மற்ற இலாக்கா அமைச்சர்களும் எடுத்துக்கூறுங்கள், இதிலிருந்தாவது திராவிட நாடு தனித்து இயங்குமானால் எவ்வளவு வளமுடன் வாழமுடியும் கூடுமானால் வடநாட்டுக்கு திராவிடமும் கடனோ அல்லது உதவியோ செய்ய முடியும் என்பதை தேசியத் தோழர்கள் உணரட்டும்.

அன்புள்ள
கூத்தரசன்

உயர் திரு எம். பக்தவத்சலம்

சென்னை

விவசாய அமைச்சரே, வணக்கம். தாங்கள் சித்திரைத் திங்கள் 1-ம் நாள் "பால் காவடி" விழா நடத்தப் போவதாக கேள்வியுற்றேன். எல்லோரும் பால் அருந்துங்கள் என்று நாடெங்கும் பிரச்சாரம் செய்யப் போவதாகவும் தெரிகிறது!

ஆவடி காங்கிரசிலே ஆசியாவின் ஜோதி—"மாதிரி சோஷலிஸம்" என்ற மாபெரும் காட்சியைக் காண்பித்து சபாஷ் பட்டம் பெற்றதைக் கண்டவுடனே குட்டி சர்க்காரில் ஒரு அமைச்சராகிய தாங்களும் தங்கள் குழுவினரும் "மக்களே பால் சாப்பிடுங்கள்" என்ற காட்சியைக் காண்பிக்க முனைந்தீர்கள் போலும்!

அமைச்சர் பக்தவத்சலனாரே! நம் நாட்டிலுள்ள மக்கள் பால் சாப்பிட மாட்டோம் என்று மறியல் செய்கிறார்களா? இல்லையே பிறகு எதற்கு இந்தக்கூத்து! காங்கிரஸ் ஆட்சியிலே எல்லாபிரச்னைகளையும் தீர்த்துக்கட்டி விட்டது போலவும், இனி மக்களுக்குப் பாலும் தேனும் வழங்கும் பணிதான் மிச்சமாகவுள்ளது போலவும் பால் சாப்பிடுங்கள் என கூற புறப்பட்டு விட்டீர்களே!

அமைச்சரே, நீங்கள் பாலும் கொடுக்க வேண்டாம், பாதாம் கீரும் சப்ளை செய்ய வேண்டாம், தினசரி ஒருவேளை உணவாவது ஏழை மக்களுக்கு என்றும் கிடைக்கும்படி செய்தால் போதும்! அது போலவே வேலையில்லாத் திண்டாட்டத்தை கூடுமான வரை ஒழிக்க முற்பட்டால் போதும்!

நீங்களோ, 'பால் சாப்பிடுங்கள்' இயக்கம் ஆரம்பிக்கப் போவதாகக் கூறுகிறீர்கள். ஆனால் மந்திரி மாணிக்கவேலரோ பாலுக்கும் விற்பனை வரி விதிக்கலாமா யென்று சர்க்கார் யோசித்து வருவதாகக் கூறுகிறார்! இப்படி ஒரு அமைச்சரின் திட்டத்தை மற்றொரு அமைச்சரின் யோசனை கடிப்பதைப் போல யிருக்கிறது!

இந்த லட்சணத்தில் தாங்கள் 'பால் சாப்பிடுங்கள்' பிரச்சாரம் செய்யப் புறப்படப் போகிறீர்கள்! ஒருக்கால் இதுவும் மாதிரி சோஷலிஸம்போல் "**மாதிரி பால் சாப்பிடுதல்**" ஆக யிருக்குமோ?

நேரு சர்க்கார் வடநாட்டைப் பொறுத்தவரை நடத்துவதோ "ஆரியக் கூத்து". தாங்களோ அதிகாரமில்லாத காரணத்தினாலே அதனால் ஏற்பட்டுவரும் இழிவுகளுக்கு திரையிடுவது போன்ற 'திருக்கூத்து'களிலும் வெத்துவேட்டு பேச்சுக்களிலும் இறங்கி யிருக்கிறீர்கள்! பரிதாபம்! பரிதாபம்!! அமைச்சர் பக்தவத்சலனாரே சித்திரைத் திங்கள் முதல்தேதி சந்திக்கிறேன்.

—கூத்தரசன்

களுக்கெல்லாம் தலைவராகப் பார்த்தார். தொந்தியைக் காட்டி வயதில் பெரியவர் என்று கூறிப் பார்த்தார். உருவமிருந்தால் போதாது, உள்ளமும் தொந்தி போல விரிந்திருக்க வேண்டும். அங்கே குறுகி யிருந்தால் அது பரிதாபத்திற்குரியது என்று மக்கள் குரல் ஒலித்தது. நான் கவிதை நடையில், கெட்டிக்காரன் திரைக் குரலில் இப்படிக் கூறிப் பார்த்தார் மானா பரம்பரை. 'இப்போதைக்கு கவிகள் தேவையில்லை, இந்த முறையில் பால பருவம் பக்குவப்படட்டும். இப்படி எதிரொலி திரை உலகிலிருந்து.

மானா பரம்பரையினரின் 'காலட்சேப' சீசனுக்கும் கிராக்கி இல்லாமல் போனது. மனிதன் என்ன கல்லாலடித்த கணேசனா? அவனுக்கும் நப்பாசை சபலம் உண்டே. உடனே தாவினான் தாவினான். 'மானா' மகத்துவம் முடிந்தது. இப்போதைக்கு மக்களுடைய அனுதாபமெல்லாம் எப்படியாவது மானா பரம்பரை 'பிடி'யோடு சென்ற இடத்திலாவது 'கிராக்கியோடு' வாழட்டும் ...பெரு உடலை வளர்க்கட்டும் என்பதுதான். மானாவுக்கு அடித்த ஆனாவிலாசத்தை போலவா எல்லாருக்கும் அடிக்கிறது. மானா இன்று நாட்டு மந்திரி. அவரது அரசியல் பிஸினஸ். அவரை பயன்படுத்தும் அரசியல் சபையும் ஒரு பிஸினஸ் கூடமாகிறது. அதாவது முன்னே சொன்னது போல ஓய்வுக் கூடமாகிறது. இப்போது சொல் இந்த மாடல் அரசியல் சோம்பேறி மடம்தானே. மடம் யாருக்குத் தேவை...தங்குமிடமில்லாத சோம்பேறிக்கு. எனவேதான் 'அந்த' அரசியல் வாதியாகவில்லை நான். நான் காரியவாதியேதான்.

கதை முடிந்ததா என்று கூறிவிட்டு சிகரெட்டுப் பாக்கட்டை எடுத்தான் சேகர்...கட்சிவிட்டு கட்சிதாவும் பச்சோந்தியின் மூளையில்லாத மரமண்டைபோல சிகரெட்டில்லாத காலிப்பெட்டி கண் மூடி குருட்டுச் சிரிப்பு சிரித்தது. பாலத்து வாசியும் சிரித்துக் கொண்டே பேச்சை முடித்தான்.

(இன்னும் வரும்)

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

●

வணக்கம். பிப்ரவரி திங்கள் முடிய நிலுவைப் பணத்தை, முழுவதையும் 22—3—55-க்குள் அனுப்பி வைக்காத ஏஜெண்டுகளுக்கு, அவர்களின் முன்பணத் திற்கேற்ப பத்திரிகைகளைக் குறைத்தோ அல்லது அனுப்பாமலோ நிறுத்தி வைக்கப் படும் என்பதைக் கண்டிப்பாகத் தெரிவித் துக் கொள்கிறோம்.

—நிர்வாகி 'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 18—3—55 : வெள்ளி

மனமிருந்தால் மார்க்கமும் புலப்படும்.

●

ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இரண்டுவிதச் சலுகைகள் தரப்படும் என்று சென்னை சட்ட சபையில் கல்வி அமைச்சர் சுப்ரமண்யம் அவர்கள் அறிவித்திருக்கிறார்.

ஏப்ரல் திங்கள் துவக்கத்திலிருந்து ஓய்வு பெறும் (ரிடையர்) ஆசிரியர்களுக்கு அவர்கள் பெற்றுவரும் சம்பளத்தில் நாலில் ஒருபங்கு சம்பளம் பென்ஷனாகக் கொடுக் கப்படும்.

முப்பது வயதுக்குக் குறைந்த ஆசிரியர் களுக்கு கட்டாய இன்ஷியூரன்ஸ் திட்டம் உண்டு. இவை யிரண்டுமே சென்னை சர்க் கார் அளிக்க முன்வந்திருக்கும் சலுகைகள்.

சாதாரணமாக சர்க்கார் சிப்பந்திக ளுக்கு, சம்பளத்தில் சரிபகுதி பென்ஷனாகக் கொடுக்கும்போது ஆரம்பப்பள்ளி ஆசிரியர் களுக்கு மட்டும் இந்த பேதாபேதம் காட்டு வது நியாயமில்லை யெனினும், இந்த அள வுக்காவது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் அவல நிலையைப் போக்க சர்க்கார் மனத் துணிவு கொண்டது ஓரளவு பாராட்டத் தக்கதேயாகும்.

எனினும், ஆரம்பப்பள்ளி ஆசிரியர் களின் சம்பளப் பிரச்னையில் சலுகை காட்ட துணிந்த ஆட்சி பீடத்தினருக்கு நாம் முக் கியமாக ஒன்றை எடுத்துக் காட்டி வற் புறுத்த விரும்புகிறோம்.

ஏப்ரல் திங்களிலிருந்து ரிடையர் ஆகும் ஆசிரியர்களுக்கு மட்டுமே பென்ஷன் என் றிருப்பதை ஜனவரி மாதத்திலிருந்து ரிடை யரான ஆசிரியர்களுக்கும் என்ற திருத்தத் துடன் பென்ஷன் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். இதனால் சர்க்காருக்கு ஏராள மான நட்டம் ஏற்பட்டுவிடும் என்று அஞ்ச வேண்டியதுமில்லை. சர்க்கார் ஊழியர்களுக் கும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் அளிக்கப் படும் பென்ஷன் தரத்தில் வித்தியாசம் காட்டும் சர்க்கார், அதற்குபதிலாக நாலைந்து திங்கள் முன்னதாக யிருந்தே பென்ஷன் திட்டத்தை செயல் படுத்துவது, பென்ஷன் பெறும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஓரளவா வது ஆறுதலை யளிக்கும்.

அடுத்தபடியாக கவனிக்க வேண்டியது சம்பளவு உயர்வுப் பிரச்னையாகும். இது குறித்து கல்வி அமைச்சரவர்கள் தமது பதி லில் குறிப்பிடும்போது "சம்பளத்தை சிறிது உயர்த்தினாலும் அதிக செலவு ஆகு மே நாம் பணத்திற்கு எங்கே போவது" என்று அங்கலாய்த்திருக்கிறார்!

பணத்தைப்பற்றிய பிரச்னையில் நமது கருத்தைத் தெரிவித்தால் அது குறுகிய மனப்பான்மை என்று தத்துவார்த்தம் பேசக்கூடும் சர்க்கார். எனவே டெல்லி ஆட்சிபீடத்தினருக்கு ஆண்டுதோறும் அனுப்பிவரும் பெரிய—கொழுத்த வரிகளை நம்மாநில சர்க்காரின் கஜானாவிலேயே சேரு மாறு உடனே ஆவனசெய்ய வேண்டுமென நாம் சர்க்காருக்குச் சொல்ல முன்வர வில்லை. அந்நிலை ஏற்படும்வரை ஆரம்ப ஆசி ரியர் சம்பள உயர்வுப் பிரச்னையையும் ஒத் திப்போட்டு வரட்டும் என்று சொல்ல நாம் விரும்பவில்லை.

ஆனால் ஆசிரியர்களின் சம்பள உயர் வுக்கு ஆகும் பணத்தை டெல்லி சர்க்கா ரிடமிருந்து கடனாகப் பெறலாம்; அல்லது தனிப்பட்ட உதவி மான்யமாகவாவது வற் புறுத்திக் கேட்டு வாங்கலாம்; சென்னை கவர்னர் தாம் பெற்றுவரும் சம்பளச் செலவு ஆகியவைகளை தாமாகவே குறைத்துக் கொண்டும், அதுபோலவே உயர்தர அதி காரிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் பெரும் ஊதியத்தில் ஓரளவு குறைத்தும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சம்பள உயர்வால் விழும் துண்டுத் தொகையைக் கூடுமான அளவு சரிக்கட்டலாம் என்பதே நமது எடுத்துக் காட்டாகும்.

தொழிலாளர் பட்டியலிலே — ஏன் இன்னும் அதைவிட தொல்லைபடும் நிலை யிலேயுள்ள ஆரம்பஆசிரியர் சம்பளப் பிரச் னையில் சர்க்கார் மற்ற காரணங்களை எடுத் துக்காட்டியும் பேசியும் ஆமை வேகத்தில் நகர்ந்து செல்வது ஆரம்ப ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பான பணிக்கு நன்றி காட்டுவதாகாது என்பதை நினைவூட்ட விரும்புகிறோம்.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சம்பள உயர்வு பிரச்னை மட்டுமின்றி நம் நாட்டிலுள்ள ஏழை நடுத்தர மக்கள் அனைவரின் வாழ்வும் செம்மையுற வேண்டுமானால், நம்நாடு தனி உரிமை பெற்றாலல்லாது வேறெந்தவழிவகை களாலும் முடியதென்பதை நம்மைவிட ஆளும் வர்க்கத்தினரே திட்டவட்டமாக அறிந்திருக்கக் கூடும்.

எனவே நம் திராவிடம் தனித்தியங்கும் நிலை ஏற்படும் வரையில், இம்மாநில மக்க ளால் செலுத்தப்படும் வரிகளில் இந்திய சர்க்காருக்கு அனுப்பப்படும் பெருந்தொகை போக மீதமுள்ள வருவாயில் கூடுமான வரை கவர்னர் சம்பளச் செலவு போன்ற சம்பிரதாய முறைகளில் சிக்கனப்படுத்தி ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள உயர்வை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுகிறோம்.

ஆக, இவையனைத்துக்கும் மனமிருந் தால் நிச்சயம் மார்க்கம் புலப்படும். ஆரம் பப் பள்ளி ஆசிரியர்களுக்கு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று சென்னை சர்க் கார் நினைத்ததற்கேற்ப அதற்கான வழி வகைகள் தெரிந்தன. அதுபோலவே அத் திட்டத்தின் மூலம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கள் பயனடைய வேண்டுமே யல்லாது ஏதோ சர்க்காருக்கு இது ஒரு பிரச்சார வேலைக்காக செய்யப்பட்டது என்று கருதப் படாமலிருக்க வேண்டுமானால் இப்பிரச்னை யை சர்க்கார் மேலும் மனமார எண்ணிப் பார்க்க வேண்டும். அவ்விதம் செய்ய முற் பட்டால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சம்ப ளப் பிரச்னை மட்டுமின்றி திராவிடத்தின் நல்வாழ்வுக்கான எல்லா பிரச்னைகளுக்குமே மார்க்கம் புலப்படும் என்பது உறுதி.

●

'கோட்ஸேயிஸமா?'

இந்தியத் துணைக் கண்டத்தின் விடுத லைப் போரில் முக்கிய பணியாற்றிய காந்தி யடிகளின் உயிரைக் குடித்த 'கோட்ஸே யிஸம்' இன்னும் தனது வெறிச் செயலை விட்டபாடில்லை யென்றே தெரிகிறது.

சென்ற வார இறுதியில் இந்திய சர்க்காரின் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களை நாக புரியில் பாபுராவ் என்பவன் கத்தியால் தாக்க முயற்சித்தானும். அவனது வெறிச் செயல் பண்டித நேரு அவர்களாலேயே தடுக்கப்பட்டு, உயிர் தப்பியுள்ளார்.

இச்செயலில் ஈடுபட்ட பாபுராவ் என் பவன் ஒன்றுக்கொன்று முரண்படும் வகை யில் தனது வாக்குமூலங்களைக் கொடுத்திருப் பதால் அவனைச் சிறைப்படுத்தி வைத்திருப் பதாகவும் தெரிகிறது. எனவே இந்நிலையில் நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை யெனினும் இச்சம்பவத்தின் உள்எண்ணமும் அதை யொட்டிய காரணங்களும் விரைவில் நாடறி யத்தான் போகிறது.

நிற்க, பொதுப்பணியிலே ஒருவருக் கொருவர் அபிப்பிராய பேதமும் ஒரு கட் சிக்கு பிற கட்சி மாறுபாடும் இருப்பது இயற்கையேயாகும். அதற்காக தனிப்பட்ட முறையில் பழிதீர்த்துக் கொள்வது அல்லது வெறுப்புணர்ச்சி காட்டுவதென்பது கடைந் தெடுத்த இழித்தன்மையாகும்.

தி. மு. கழகத்தினருக்கு இந்தியப் பிர மர் நேரு போன்றவர்களிடம் பொதுப் பணியில்—அரசியல் விவகாரங்களில் அதிக வேறுபாடுகளிருப்பினும் அவரவர்களின் தனிப்பட்ட வாழ்வில் அசைக்க முடியாத நல்ல எண்ணம் உண்டு என்பதை நாமே விவரிப்பது தற்புகழ்ச்சியாகும்.

எனவே, ஜவகர்லால் நேரு அவர்கள் உயிர் தப்பியதற்காக நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

இலங்கைவாழ் திராவிடருக்கு மேலும் கொடுமையா?

நேரு சர்க்கார் என்ன செய்கிறது?

●

இலங்கை குடியேற்றச் சட்டத்தைத் திருத்து வதற்கான மசோதா ஒன்றை, பிரதமர் கொத்தலா வலை இலங்கை மக்கள் சபையில் தாக்கல் செய்துள் ளார்.

இப்போது 'விசா' வைத்திருப்பவர்களும், காலாவதியான குடியிருப்பு அனுமதி பெற்றிருப் பவர்களும் தொடர்ந்து இலங்கையிலிருப்பதை சட்ட விரோதமாக்கி, அவர்களை உடனே இலங்கை யிலிருந்து வெளியேற்றும் வகையில், குடியிருப்பு அனுமதி வழங்குவதை முழுவதும் ஒழித்துவிட திருத்த மசோதா வழி வகுத்துள்ளது என்று தெரி கிறது.

காமாட்சியம்மாள்—சென்னியப்பன்

தர்மபுரி தி. மு. கழக நிர்வாக உறுப்பி னர் தோழர். சென்னியப்பன் அவர்களின் துணைவியார் காமாட்சியம்மையாருக்கு 11-3-55 காலை 7-மணிக்கு, ஆண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் நினை வாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று அனுப்பப்பட்டது. வரப்பெற்றோம் நன்றி—நிர்வாகி.

பூங்கொத்துகள்

தோழர் இளஞ்சேரன் தீட்டிய பூங் கொத்துகள் நமது அலுவலகத்திற்கு வந்து சேருவதில் ஏற்பட்ட தாமதத்தினால் இவ் வாரம் வெளியிட முடியாமைக்கு வருந்து கிறோம்—அடுத்து வெளிவரும்.

—ஆ—ர்

சந்தாதாரர்களுக்கு

○

வணக்கம், சந்தா நிலுவையுள்ள தோழர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டி ருக்கிறது, எனவே சந்தாத் தொகையை உடனே தவறாமல் அனுப்பி வைத்து தொடர்ந்து சந்தாதாரராயிருந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

நிர்வாகி—'திராவிடன்'

இரு துருவங்கள்!

குருடனுக்குக் கண் தெரியாது
செவிடனுக்குக் காது கேளாது

இது நாம் அறிந்த ஒன்று. ஆனால் அந்த அம்மையாரோ குருடிதான் எனினும் படிக்கிறார்! பார்க்கவும் செய்கிறார். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

அந்தம்மாள் குருடி மாத்திரம் இல்லை. செவிடியும்கூட! ஆனாலும் நாம் பேசுவதைக் கேட்கிறார். நாட்டியத்தை ரசிக்கிறார்! சங்கீதத்தை சகல ரசனையோடு கேட்கிறார்.

என்னே விசித்திரம் என்று வியக்கத் தோன்றுகிறதல்லவா! இன்னும் கேளுங்கள்! இந்த அம்மையார் குருடு—செவிடாக இருக்கிறாரே இவர் பத்திரிகைகளுக்கு கட்டுரை வேறு எழுதுகிறாராம்! தாகூர், பெர்னாட்ஷா, ஈன்ஸ்டீன் போன்றவர்களின் கருத்துக்களை யெல்லாம் வெளியிடுகிறாராம்! இதுமாத்திரமல்ல சினிமாவில்கூட நடித்திருக்கிறாராம்!

ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கிறது நமக்கு! ஆம்! இருக்கத்தானே செய்யும்! குருடி! வாய் பேச ஆகாது ஊமை! காதோ கேட்காது! இப்படிப்பட்ட ஒரு மாது பேசுகிறார், எழுதுகிறார், நடிக்கிறார் என்றால் ஆச்சரியம் கொள்ள முடியாமலிருக்கிறதா என்ன?

யார் அந்த அம்மையார்? கடவுள் அருள் பெற்றவராக இருக்குமோ, ஐயனின் அருள்பாலிப்பு இப்படி ஆக்கியிருக்குமோ என்று நம் நாட்டு ஆத்திக அன்பர்கள் நினைக்கலாம் ஏனெனில் ஆத்திகத் தன்மையில் சிறந்தது இந்தியா என்னும் பட்டத்தை மேலை நாடுகளுக்கு காட்டித் தீரவேண்டும் என்னும் ஆசை உடையவர்கள் நிறைந்த நாடல்லவா இது! மகேசுர மகிமையே மகிமை என்று மண்டியிட்டு வணங்குபவர் வேறு எப்படித்தான் நினைப்பர்?

அவரோ தெய்வத்தின் அருள்பாலிப்பால் அல்ல தன் கையே தனக்கு உதவி என்று தளராது பாடுபட்டதால்தான் இந்நிலை அடைய முடிந்தது! தான் குருடியாக இருந்தாலும் தனது திறமை—சக்தி ஆகியவற்றின் மூலம் கண் பார்வை பெற்றவராகிவிட்டார். காது கேட்காதவராக இருந்தாலும் விஞ்ஞானத்தின் உதவியினூடே தனது நுண்ணிய செயல் மூலம் காது கேட்கக் கூடியவராகிவிட்டார்.

விஞ்ஞானம்! சிறந்த பண்பு!!

இந்த இரண்டுமே சாதாரண நல்ல மனிதனைப் போலாக்கிவிட்டது அந்த அம்மையாரை. விஞ்ஞானம் வாழ்விற்கு ஒளியைக் கொடுத்தது. அவரது சிறந்த பண்போ சிந்தனையைத் தூண்டி பிறருக்காக தன்னை பயன்படுத்தும்படி செய்துவிட்டது.

குருடுதான்—செவிடுதான்! எனினும் எத்தனைய மேம்படும் எண்ணங்கள்— செயல்கள்!

மிஸ் ஹெலன் கெல்லர் (Miss Helen Keller) என்னும் பெயருடையவர்தான் அந்தப் பெண்மணி. பிரிட்டன் தேசத்து மாதுதான் இந்தக் குருடு, செவிடானவர். இதோ அவரைப் பற்றி மேலும் சில,

மிஸ் ஹெலன் கெல்லருக்கு இப்போது வயது 74 இவர் 27—6—1880-ம் ஆண்டில் இங்கிலாந்து தேச சரித்திரத்தில் பெயர் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவராக 'அலபாமா' என்னும் இடத்தில் பிறந்தார்: இவர் தந்தை அமெரிக்கச் சண்டையின் போது (1865—69) அரசாங்க பட்டாளத்தின் தலைவராக இருந்தார். அதற்குப்பின் பத்திரிக்கை ஆசிரியராகவும இருந்திருக்கிறார்.

19-வது மாதத்தில் அதாவது கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ வயதிற்குப் பின் இந்த அம்மையார் ஒருவிதக் காய்ச்சல் (Urain fever) நோயால் வருந்தினார்! இந்நோய்தான் ஹெலன் கெல்லரின் வாழ்க்கையையே பாதிக்கும்படி செய்துவிட்டது! ஆம்! இதனால்தான் அம்மையார் காது கேட்காதவராயும்—குருடராகவும் ஆக்கப்பட்டார்.

ஆறாவது வயதில் 'பாசுட்டன்' என்னும் இடத்தில் உள்ள பிரசித்தி பெற்ற 'குருடர்' பள்ளியில் சேர்க்கப்பட்டார். இவருக்கு ஆசிரியையாக மிஸ் 'ஆனி செள்ளிவியன்' இருந்தார்! பள்ளிப் படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். 'எழுத்து'—'பிரெயில்' மூலம் வாசிக்கப் படித்தார். 800 வார்த்தைகளுக்கு மேல் மிக்சுலபமாகப் படித்து விட்டார்—சில திங்களுக்குள்!

பத்தாவது வயதில் இவர் 'நியூயார்க்' சென்று 'ஸ்காபாபுல்லர்' தலைவராக இருந்த 'கோரேச்' [illegible]டன் பள்ளியில் சேர்ந்து படித்தார்! அதிலும் [illegible] தேர்ச்சி பெற்றார். அங்கு படித்துக்கொண்டிருக்கும் போது தனது தங்கைக்கு, நான் ஊமையில்லை' என்று கடிதம் எழுதியிருக்கிறார்.

அங்கு படித்துக் கொண்டிருக்கும் போதே மேடையேறிப் பேசவும் படித்துக் கொண்டார். மூன்று வருடங்களாகப் பேசக்கஷ்டப்பட்டார் ஏனெனில் அவரது சப்தத்தை அவரால் முறைப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இவர் ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு போன்ற பாஷைகளை யெல்லாம் படித்திருக்கிறார்.

16-ம் வயதில் 'கேம்பிரிட்ச்'சில் உள்ள பெண்கள் கல்லூரியில் போய்ச்சேர்ந்தார். 1904-ல் ஆங்கிலத்தில் 'ஆனர்ஸ்' பட்டம்பெற்றார், இவர் கல்லூரியில் படிக்கும் போது பேச்சைக் குறிப்பிட்டு அவர்கை மூலம் சொல்லிக் கொடுக்கவும், எழுத்துக்களை வாசிப்பதற்கு ஏதுவாக அவைகளைக் கைக் குறிப்புகளின் நிமித்தம் தெரியப்படுத்துவதற்காகவும் 'மிஸ் செள்ளிவியன்' அவரோடு இருந்தார்.

இரண்டு வருடத்திற்குப்பின் 'என் கதை' (The Story of Myself) என்னும் புத்தகத்தை எழுதினார். அதோடு அநேக பத்திரிகைகளிலும் எழுத ஆரம்பித்தார். அவர் அநேக புத்தகங்கள் எழுதியுள்ளார். அவைகளுள் முக்கியமானது 'நான் வசிக்கும் உலகம்' (The world I Live in), இருட்டிற்கு வெளியே' (Out of Dark) 'உனது மதம்' (My Religion). 'மிட்ச்ட்ரீம்' [Midstream], 'ஸ்காட்லந்தில் ஹெலன் கெல்லர்' [Helen Keller at Scotland] எனது பின்னைய வாழ்க்கை' [MY later life], 'பீஸ் அட் ஈவன் டைடு' [Peaee at Eventide], 'உண்மையோடு இருப்போம்' [Let us have faith] போன்றவைகளாகும்.

இவர் எழுதும்போது சாதாரண டைப் அடிக்கிற இயந்திரத்தையோ அல்லது பிரைல் மெசினையோ [Braile Machine] உபயோகப்படுத்துகிறார்.

கவிதை, பேச்சு, சங்கீதம் போன்றவைகளை சகதோழி மூலம் அவருக்கு அதை உச்சரிக்கப்படும்போது அவர் அதை மிகவும் பாராட்டுகிறார்! ஒருவரின் நகைச்சுவையை கைஅசைவு உச்சரிப்பு மூலம் உணர்ந்து அனுபவிக்கிறார். பியானோவின் இனிய கானத்தை அளிக்கிறார். கடந்த வருடத்தில் ஐசன் ஹோவர் சிரிப்பதை தனது கைநுனியின் உணர்ச்சி உச்சரிப்பு மூலம் அறிந்தார்.

'சமாதானம்' என்னும் திரைப்படத்திலும் நடித்திருக்கிறார்!

இப்படிப் படித்தோம் நடித்தோம் என்றிருக்கவில்லை' சீரிய பண்பு மூலம் அவர் தனது ஆயுள் முழுவதையும் குருடர், செவிடர் நலனுக்காகவே அர்ப்பணித்து அவர்களின் நலத்திற்காகப் பாடுபட்டும் வருகிறார்! தளர்ந்த வயதிலும் கூட குருடர் செவிடர்களுக்காக அவர் ஆற்றும் தொண்டு அளப்பரியது இப்போது தூர கிழக்கில் இந்தியா பர்மா, பாக்கிஸ்தான், ஜப்பான், பிலிப்பைன்ஸ்போன்றநாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள செவிடர்-குருடர்களின் நலத்திற்கு ஆவன செய்யும் நோக்கத்துடன் பிரயாணஞ்செய்து சுற்றி வருகிறார்கள்.

இப்போது இந்தியா வெங்கும் சுற்றி வருகிறார்கள்! சமீபத்தில் சென்னைக்குக்கூட வந்து சென்றார்கள்!

ஹெலன் கெல்லர் ஒரு குருடர்தான்! செவிடர்தான்! எனினும் விஞ்ஞான [illegible]த்தால் அமைக்கப்பட்டுள்ள குருடர், செவிடர் கல்வி முறைப்படி அவர் படித்துத் தேறி இன்று இத்தகைய அதிசயிக்கும் பிறவியாக நம்மிடையே உலா வருகிறார்!

இது பிரிட்டனில்!

*

இங்கும் பலர் வாழ்க்கை சொல்லப்படுகிறது!

ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையாகப் பிறந்தார் அவர்! "பிள்ளைக்கலி தீர்க்க வந்த பெரும் பேறே" என்று சீராட்டிப் பாராட்டி-வளர்த்தனர்-பெற்றோர்! ஒரே பிள்ளை—எனவே ஒரே கொஞ்சல்! கொள்ளை மகிழ்ச்சி,பெற்றோர்களுக்கு.

பையனுக்கோ வயது ஒன்று, இரண்டு என்று ஐந்தையும் எட்டிப்பிடித்து விட்டது. பெற்றோர்களுக்கு மீண்டும் துன்பம் உண்டாயிற்று! பெற்றெடுத்ததோ ஒரே ஒரு பிள்ளை—கொடுத்து வைத்தது என்று கருதிக் களிப்படைந்தனர். ஆனால் பேசாத குழந்தையாகி விட்டது!

பிறந்ததோ ஒன்றே ஒன்று. அதுவும் ஊமை என்றால் வருத்தம் இருக்காதா என்ன! தாகம் எடுக்க தண்ணீரை நினைத்து அலைகிறோம். தண்ணீரும் தென்படுகிறது. இரு கைகளிலும் மொண்டுவிட்டோம். ஆனால் குடிக்கவோ முடியவில்லை, அவ்வளவு உப்பு கலந்த தண்ணீர் அது என்றால், எப்படியிருக்குமோ அப்படி யிருந்தது அவர்களுக்கு:

பிறந்த பிள்ளை ஊமையாகிவிட்டதால் எடுத்துச் செல்கின்றனர்...ஊமை பள்ளிக்கு என்று நினைக்கிறீர்களா. அதில்தான் நம்மவர்களுக்கு நம்பிக்கை கிடையாதே முருகனிடம் தெண்டனிட்டு ஊமையை போக்கும்படி முழங்காலிட்டுக் கெஞ்சுகின்றனர். பல நாட்கள் பூசை. மண்டல பூசைகள் வேறு! நோன்புகள் வேறு. திதி திவசங்கள் வேறு. அப்படி எத்தனையோ செய்து பார்த்தும் குழந்தை வாய் திறப்பதாக இல்லை.

சஞ்சலம் மிஞ்சுகிறது பெற்றோர்களுக்கு. ஒரு தேதியை நிர்ணயிக்கின்றனர் அதற்குள் குழந்தைக்கு பேசும் சக்தியை செந்தில் வடிவேலன் அளிக்காவிடில் அவன் சன்னதியிலேயே சாவது என்று முடிவு கட்டுகின்றனர். குறித்த நாளும் வந்துவிட்டது குழந்தையோ பேசக் காணோம், எனவே குழந்தையோடு கடலில்போய் விழுந்து சாகப் போகின்றனர். தண்ணீர் தோள் அளவு வந்து விட்டது. பெற்றோர்களின் பக்தி அப்போதுதான் மயில் வாகன ரூபனுக்குத் தெரிந்தது போலும்! பெரியவர்போல் அவர்கள் முன் தோன்றி ஆசிகூறி மறைகிறார்,

உடனே குழந்தை—ஐந்து வயதுப் பாலகன்

> பூமேவு செங்கமலப்
> புத்தேளுந் தேறரியா
> பாம்மேவு தெய்ப்
> பழமறையும்—தேமேவ......

என்னும் கந்தர் கலிவெண்பாவைப் பாடுகிறார்!

பின் மதுரை செல்கிறார்—மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடுகிறார்! நீதிநெறிவிளக்கம் என்று கிறார். சிதம்பரம் செல்கிறார், நடராசனைத் தொழுது சிதம்பரம் மும்மணிக்கோவை, சிதம்பரம் செய்யுட் கோவை...இப்படி பல நூல்களைப் பாடி காசி வரை சென்று மடம் கண்டு திரும்புகிறார்.

யார் இவர் என்கிறீர்களா? இவர் பெயர் குமர குருபரசாமிகள்! 17-ம் நூற்றாண்டில் பிறந்தவர்- ஊர் ஸ்ரீவைகுண்டம். அவரது தந்தை சண்முகசிகாமணிக் கவிராயர் என்பவர், தாயார் சிவகாமசுந்தரி என்பவர்!

இப்பெற்றோருக்குத்தான் ஊமையாகப் பிறந்தாராம் குமரகுருபரர். வேல்முருகனின் விழிபட்டதும் செய்யுளை இயற்ற ஆரம்பித்துவிட்டாராம்! இப்படிக் கூறுகின்றனர் இங்குள்ள சைவநெறியன்பர்கள். 27—11—54ந் தேதியில் திருச்சி ரேடியோ நிலயத்திலிருந்து கூட குமரகுருபரர் பற்றிய வாழ்க்கை விபரத்தை இப்படித்தான் கேட்க முடிந்தது! இது இங்கு!

*

பிரிட்டனிலோ ஹெலன் கெல்லர் பிறந்த $1\frac{1}{2}$ வயதிலேயே குருடராயும், செவிடராகவும் ஆகிவிட்டார்! ஸ்ரீவைகுண்டத்து சண்முக சிகாமணி கவிராயரைப் போல அவரைப் பெற்ற பெற்றோர்கள் வருந்தவில்லை. அதற்கென்று அமைக்கப்பட்ட பள்ளிக்கு அனுப்பினா! அதன் மூலம் அவர் பயிற்சி பெற்று கண்தெரியாதிருந்தும் கண்ணுள்ளவராய், காது கேட்காதவராக இருந்தும் கேட்பவராய் ஆகிவிட்டார்! எழுதப்பேச, உணர ஆரம்பித்து நடிக்கவும் படித்து, அவர்களைப் போல் உள்ள ஏனையோருக்குத் தொண்டாற்றவும் ஆரம்பித்து விட்டார்!

வயதோ 74! எனினும் அவர்கள் வைத்தியத்திற் காகப் பாடுபட்டு வருகிறார். உலகு சுற்றி அவர்கள் உய்யவழி காணுகிறார்! இன்றும்!

ஆனால் இங்குள்ள மெய்யன்பர்களோ ஊமையான குமரகுருபரர் பேசப் படித்தது பள்ளிக்கூடத்திலல்ல பரமனிடத்தில் என்கின்றனர்! முருகக் கடவுள் முழித்துப் பார்க்கிறாராம். உடனே கவிதை இயற்ற ஆரம்பித்துவிட்டாராம்! கூறுகின்றார்கள், சைவநெறியன்பர்கள்! நம்பவொண்ணாதது!

அப்படியானால் பிரிட்டனிலும் கடவுள் இல்லை என்று தோழர்கள் கருதி விடாதீர்கள். அங்கும் இங்குள்ள மெய்யன்பர்கள் போல் போற்றும் கடவுளும் கொண்டு கொண்டாடப்பட்டுத்தான் வருகிறார்கள்! அவர்கள் புராணங்களில் ஏசுவின் இவ்வித செயல்களைப்பற்றிப் படிக்கவும் செய்கிறார்கள்.

நடக்க முடியாது இருந்த ஒருவனை ஏசுவின் முன்னாலே வீட்டுக் கூரையைப் பிய்த்துக் கொண்டு இறக்குகின்றனர், ஏசுவின் அருளினால் எழுந்து நடக்கிறான் உடனே! ஒருகுளம்! 'பெதங்கா' என்பது அதன் பெயர். அதில் வியாதியுள்ளோர் மூழ்கி

8-ம் பக்கம்

காதலும் கடமையும்

சீனத்துச் சிறுகதை : மூலம். மாபெங் : தமிழில்: கோவை. க. இரத்தினம்

அவள்!

மான் விழிக்காரி! தேன் மொழிப் பாவை!!

குயில் குரல் கற்றுக்கொண்டது அவளிடந்தானே என்று அதிசயிப்பர் கவிஞர்கள்!

அவளது இரத்தச் சிவப்பு அதரத்தின் சுவைகாண ஆயிரமாயிரம் இளைஞர்கள் தவங்கிடந்தனர்!

தமிழகத்துக் கலைஞனொருவன் தன் கைத்திறன்முழுதும் காட்டி செதுக்கிய சிற்பம் உயிர் பெற்றுலவுவதுபோல, அவ்வூரிலே வட்டமிட்டபடி யிருந்தாள் அந்த வயதுக் குமரி!

கரியநிறக் கூந்தலும், கண்டோரைக் கொள்ளை கொள்ளும் அவளது முகவசீகரமும் கிழடுகளைக் கூடக் கிறுகிறுக்கச் செய்துவிடும் என்பதில் எவருக்குமே சந்தேகம் ஏற்பட்டதில்லை!

மொத்தத்தில் அவள்தான் அந்த கிராமத்திலேயே பேரழகி! அவளது வசீகரவலைப்பிலே தங்கள் இதயம் பறிகொடுக்காதோர், அந்தப் பெரிய கிராமமான சிங்குயில், எவருமே கிடையாது!

'சியோசிங்!'

இதுதான் அந்த அழகு ராணியின் திருப்பெயர்! இருபது வயது பூர்த்தியடைந்த அக்கட்டழகிக்கு, அவளையுடைய ஊரிலுள்ள இளைஞர் கூட்டம் போட்டி போட்டுக் கொண்டிருப்பது நன்றாகத் தெரியும்! ஆனால் இவர்களில் ஒருவனைக்கூட ஏறிட்டுப் பார்க்கவில்லை அந்த ஏந்திழைபாள்!

வாலிபர்களின் வாடிப்போன இதயத்திலிருந்து நீண்ட பெருமூச்சுகள் வெடித்தன! வெப்பம் மிகுந்த அப்பெருமூச்சில் வேதனைப் புயல் வீசியடித்தது!

ஆனால் அந்த எழில் நங்கையோ, புயல் காற்றடித்ததும் வேறுடன் வீழ்ந்துவிடும், வீரமில்லா மரமாக இருக்கவில்லை. வளைந்து கொடுத்து வாழும் நாணலாக இருந்தாள்!

காதல் உலகிலே சிக்கி, கணவனின் கைப்பொம்மையாகி அவனுக்குப் பணிவிடை செய்து வாழ்வதைவிட, தனது அன்னைத் தாயகத்துக்கு பெரும்பணி ஆற்றுவதையே சிறந்த சேவை என எண்ணினாள் சியோசிங் நாட்டுக் குழைக்கும் நல்ல பணிக்காக அவள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டாள்!

*

சுன்செங், அவ்வூர் வாலிபர் கழகத்தின் செயலாளன். அறிவும் ஒழுக்கமும், நற்குண நற்பண்புகளும் கொண்ட இளைஞன்! தனது தாயகத்தின் நல்வாழ்வுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட எத்தனையோ எண்ணற்ற சீனநாட்டு வாலிபர்களில் சுன்செங்கும் ஒருவன்!

பொதுநலக் காரியமாக பலமுறை சுன்செங்கும் சியோசிங்கும் பலமுறை சந்தித்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டது. அறிவும் அழகும் மிக்க சுன்செங்கின் தோற்றம், சியோசிங்கின் மனதை வெகுவாகக் கவர்ந்து விட்டது. அதுபோலவே சிரித்துச் சிரித்துப் பேசும் சியோசிங்கை, சுன்செங்கும் தன் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டான்!

நாளடைவில் இவர்களது நட்பு காதலாக உருப்பெற்றது. சிங்குயி கிராமத்து இளைஞர்களின் ஏக்கப் பெருமூச்சுக்கிடையே அவர்களது காதல் வளர்பிறையென வளர்ந்தது. கூடிய விரைவில் இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்தனர்!

காதலர் இருவரும் கருத்தொருமித்து ஆதரவுபட்டு விட்டமை கண்டு, அவர்களது பெற்றோர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். சியாங்கே ஷேக் ஆட்சியின் போது இவர்கள், குத்தகை கொடுக்கத் தவறியதற்காக, பண்ணையார்களால் கைது செய்யப்பட்டு ஒன்றுச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள். சிறையிலே ஏற்பட்ட இரண்டுவாரப் பழக்கம் ஏழெட்டு வருடங்களாகியும் அவர்களைவிட்டு நீங்கவில்லை. தாங்கள் இருவரும் எதிர்காலத்தில் சம்பந்திமார்கள் ஆவோம் என்று அப்பெற்றோர்கள் சிறையில் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள்!

மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தார்கள் சுன் செங்கோ வெகு உற்சாகமாகக் காரியங்களில் ஈடுபட்டுச் செயலாற்றினான்.

திடீரென்று சுன் செங்குக்கு சியோசிங்கிடமிருந்து, ஒரு கடிதம் வந்தது. 'திருமணத்தை தற்காலிகமாக நிறுத்திவிட வேண்டும்' என்று அவள் அதில் எழுதியிருந்தாள்!

காரணம் ஏதும் அறியாதவனாக குழம்பிய மனதுடன் அவளது வீட்டை நோக்கிச் சென்றான். புன்னகை பூத்த முகத்துடன் இருகை நீட்டி வரவேற்றாள் சியோசிங்

பிரசவ பயிற்சி நிலையம் ஒன்றை மாவட்டத் தலைநகரில் திறக்க அதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளனர். அதில் நானும் கலந்து பயிற்சிபெற விரும்புகிறேன்!—இப்படிக் கூறினாள் சியோ,

அப்படியா மிக்க மகிழ்ச்சி! மக்களுக்காக சேவை செய்வதற்காக நீ பயிற்சி பெற விரும்புகின்றாய். உன்னுடைய நல்ல குணத்தைப் பாராட்டுகின்றேன். என்றான் சுங் செங்.

சிறிது நாட்களுக்குள் சியோ பயிற்சிப் பள்ளியில் சேர்ந்துவிட்டாள். திருமணம் நடைபெறாமல் பாதியில் நின்றுவிட்டமை கண்டு இருவரது பெற்றோர்களுக்குமே மிக வருத்தம்.

சியோ, படிப்பை முடித்து விட்டு, திரும்பி வந்த போது. மழை காலம் ஆரம்பித்து விட்டது! மீண்டும் சுன் செங், அவளிடம் திருமணம் பற்றிப் பேச்செடுத்தான். ஆனால் சியோவோ, புது வருடப் பிறப்புவரை பொருத்திருங்கள்'' என்று கூறிவிட்டாள்.

புது வருடம் பிறந்தது. உழவர்கள் விவசாய வேலையைத் துவங்கிவிட்டனர் சீன சர்க்கார் அந்த ஆண்டு, ஒரு உற்பத்திப் பெருக்கத் திட்டம் போட்டிருந்தனர். அந்த திட்டத்தை நிறைவேற்ற நாட்டில் உள்ள இளைஞர்கள் எல்லோரும் அப்பணியில் ஈடுபட்டனர். வாலிபர் கழகச் செயலாளனாக இருக்கும் சுன்செங்மட்டும் சும்மா இருக்க முடியுமா என்ன! சர்க்காரின் திட்டத்தை நிறைவேற்றும் பணியில் சுன் செங்கும் முனைந்தான். அதன் காரணமாக அந்த ஆண்டு முழுதுமே அவனுக்கு திருமணம் பற்றி எண்ணக்கூட நேரமில்லாமல் போய்விட்டது!

ஒருவாறு விதைப்புகள் எல்லாம் முடிந்துவிட்டது. ஒருநாள் சியோவைக் காணச் சென்றான் சுன் செங். இருவரும் நீண்ட நேரம் பேசி அவர்களது திருமணம் பற்றி ஓர் முடிவுக்கு வந்தனர்.

மறுநாள் காலை மாவட்ட ரிஜிஸ்திரார் அலுவலகத்தில் இருவரும்சந்தித்து அங்கேயே பதிவுத் திருமணம் செய்து கொள்வதென்றும் ஒருவரை யொருவர் சந்திக்காமல் அங்கிருந்து திரும்புவதில்லை எனவும் இருவரும் முடிவுசெய்து கொண்டு பிரிந்தனர்.

*

அழகான ஆடை அணிகளை அணிந்து கொண்டு அழகின் திருவுருவமாக தலைநகருக்குச் செல்லும் வழியில் சீனத்தாயகத்தின் தேசியகீதத்தை உரத்த குரலில் உற்சாகம் குமிழியிட பாடியவண்ணம் சென்று கொண்டிருந்தான் சுன்செங்.

இன்னும் சற்று நேரத்தில் தனது இன்னுயிர்க் காதலி சியோ சிங்கைக் காணப்போகிறோம் என்ற எண்ணம் அவனது நடையில் ஒரு மெருக்கேற்றி விட்டது. இன்னும் சற்று நேரத்தில் கணவனும் மனைவியுமாக இருவரும் இவ்வழியில் வருவோம் என்பதை எண்ணும்போது அவன் மனம் இன்பத்தால் நிறைந்து வழிந்தது வழிமேல் விழி வைத்துச் சியோ காத்திருப்பாள் என்ற நினைவு அவன் உள்ளத்திலே எழுந்ததும் அவனை யறியாமலே அவனுடைய கால்கள் வேகமாக நடந்தன.

ஒரு திருப்பத்தில் திரும்பிய அவன், அங்கு சாலையில் கவிழ்ந்து கிடக்கும் குதிரை வண்டி யொன்றைப் பார்த்தான். முன்தினம் பெய்த மழையின் காரணமாக சாலை எங்கும் ஒரே சகதியாக இருந்தது. பாரமேற்றி வந்த வண்டி, குதிரை இழுக்க முடியாததால் சகதியில் சிக்கிக் கவிழ்ந்து விட்டது. வண்டிக்காரனோ கன்னத்தில் கையை ஊன்றிய வண்ணம் ஒருபக்கமாக உட்கார்ந்திருந்தான்.

இக்காட்சியைக் கண்ட சுன்செங் வண்டிக்காரனை அணுகி, 'இந்தச் சாமான்கள் எங்கிருந்து வருகின்றன?' என்று விசாரித்தான்.

'இதுவா? கொரியாவில் போராடும் நம் சீனமக்கள் படைகளுக்காக நமது மாவட்டத்தினர் அனுப்பிய பரிசுப் பொருள்கள்தான் இவை புகை வண்டி நிலையத்துக்குக் கொண்டுபோக வேண்டும்; நடுவழியில் இப்படி நேர்ந்து விட்டது'—துக்கத்துடன் கூறினான் வண்டிக்காரன்.

இதைக் கேட்டதும் சுன்செங் துள்ளிக் குதித்தான்; நமது மக்கள் சேனைக்குச் செல்லும் நன்கொடைப் பொருள்களா இவை! சரி சீக்கிரம் வா நான் உனக்கு உதவி செய்கிறேன் என்று வண்டி விழுந்து கிடக்கும் இடத்தை நோக்கி ஓடினான்.

வண்டிக்காரனும் உற்சாகத்துடன், நம் இருவரால் மட்டும் முடியாது, அதோ வருகிறார்களே அவர்களையும் கூப்பிடு' என்றான், தூரத்திலே வந்து கொண்டிருந்த சிலரைச் சுட்டிக்காட்டி.

படையினருக்குச் செல்லும் பரிசுப் பொருள்கள் என்று கேள்விப்பட்டதும் வழியில் வந்த சிலரும் உதவி செய்ய முன்வந்தனர். சுன்செங்கோ தான் எங்கு செல்ல வந்தோம் என்பதை முற்றிலும் மறந்தவனாய் செயலில் ஈடுபட்டான்.

சற்று நேரத்தில் வண்டி சரி செய்யப்பட்டு, சாமான்களும் ஏற்றி கட்டி முடிக்கப்பட்டன. வண்டிக்காரன் மகிழ்ச்சியுடன் சுன்செங்குக்கு வணக்கம் செலுத்தியவாறு குதிரையைத் தட்டி விட்டான். கண்ணுக்கெட்டிய தூரம் சென்று வண்டி மறையும்வரை அதையே பார்த்துக் கொண்டிருந்த சுன்செங் மீண்டும் தன்வழியே நடக்கலானான்.

வண்டியைச் சரி செய்ய சேற்றில் இறங்கியதால் அழகான அவனது திருமண ஆடைகள் அனைத்தும் ஒரே சேறாகக் காட்சி யளித்தது.

அலங்கோலமான தனது ஆடைகளை நோக்கிய அவனது கண்கள் அண்ணாந்து ஆகாயத்தை நோக்கியது, மதியம் ஆவதற்கான அடையாளமாக சூரியன் நடுவானத்துக்குச் சமீபமாக வந்து கொண்டிருந்தான். சியோசிங் ரொம்ப நேரம் காத்துக் கொண்டிருப்பாள் என்ற எண்ணம் எழவே ஓட்டமும் நடையுமாக அவன் சென்றான்.

அப்பாடா! எப்படியோ தலைநகருக்குச் சமீபமாக வந்துவிட்டான். குறுக்கே ஒரு கால்வாய் தான். இதைக்கடந்து சிறிது தூரம் சென்றால், மாவட்ட ரிஜிஸ்திரார் அலுவலகம் அங்குதான் அவனது காதலி காத்திருப்பாள், அவனது வரவுக்காக

வேகமாகக் கால்வாய் பாலத்தின்மீது சென்று கொண்டிருந்த அவனுக்கு எதிரே சிலர் 'விடாதே பிடி! ஐந்தாம் படை, நாசவேலைக்காரன், அவனைப் பிடி' என்று கூச்சல் போட்டுக்கொண்டு ஒருவனைத் துரத்தி வந்தனர். அவனோ எவர் கையிலும் அகப்படாது ஓடினான்.

இதை கவனித்த சுன் செங், அனைவரையும் முந்திக் கொண்டு அவனைப் பிடிக்க ஓடினான். கூட்டம் முழுவதும் பின் தங்கிவிட்டது. ஆனால் இருவர் மட்டும் ஓடிக்கொண்டே யிருந்தனர்.

முன்னால் ஓடிக் கொண்டிருந்த அந்தக் கைக்கூலி பின்னால் திரும்பி இதோ பார், கொன்றுவிடுவேன் என்று கூறி நாட்டு வெடிகுண்டு ஒன்றை வீசினான் ஆனால் சுங்செங்கோ ஒன்றையும் கவனிக்கவில்லை. எப்படியாவது அவனை பிடித்துவிட வேண்டும் என்பதிலேயே கண்ணாக ஓடினான்.

'அந்த நாசவேலக்காரனைப் பிடியுங்கள் என்ற சுன் செங்கின் கூக்குரல் கேட்டு பக்கத்து வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த குடியானவர்கள் எல்லோரும் தங்கள் அரிவாள் மண்வெட்டி சகிதம் துரத்தத் தொடங்கினர்.

ஆபத்து நெருங்குவதைக் கண்ட அந்த நாசவேலைக்காரன் கால்வாயில் குதித்து தப்ப எண்ணி நீரில் குதித்து விட்டான். அவனது எண்ணத்தை அறிந்துகொண்ட சுன் செங் தானும் நீரினுள் பாய்ந்தான்.

தண்ணீருக்குள் இருவருக்கும் நீண்டதோர் போராட்டமே நடைபெற்றது. கைக்கூலியோ சுன் செங்கின் காதைப் பிடித்து பலமாகக் கடித்து தண்ணீருக்குள் அமுக்கமுயன்றான். என்றாலும் அந்தக் கைக் கூலியை விடாது பிடித்து இழுத்து கரைக்கு கொண்டுவந்து சேர்த்தான் இதற்குள் பின்னால் ஓடி வந்துகொண்டிருந்த பொதுஜனக்கும்பல் அந்தத் துரோகியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

காதிலிருந்து இரத்தம் வடிய, சேறு படிந்த ஈரத்துணிகளோடு, அவலட்சணத்தின் திருவுருவமாக நின்ற, சுன் செங்கிடம், இந்த நாசவேலைக்காரன் தந்திக் கம்பிகளை வெட்டி விட்டுக் கொண்டிருந்ததாகவும், தாங்கள் பிடிக்க முயலவே தப்பி ஓடிவந்ததாகவும், அவனைத் துரத்திக்கொண்டு வந்த கூட்டத்திலிருந்து ஒருவர் கூறினர்.

சுன்செங்கோ அதையொன்றும் காதில் போட்டுக் கொள்ளாமல், அவனை மாவட்ட அலுவலகத்துக்கு, விசாரணைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறிவிட்டு விர் என்று நடந்தான்.

*

நேரே ரிஜிஸ்திரார் அலுவலகத்தில் சென்று சுன்செங் தன் காதலியைத் தேடியபோது சியோசிங் அங்கு காணப்படவில்லை. பலரிடம் விசாரித்தும் தக்க பதில் கிடைக்கவில்லை. நேரமோ மதியம் தாண்டிவிட்டது. நீண்ட நேரம் பார்த்திருந்து நம்மைக் காணாமல் திரும்பிச் சென்றிருப்பாளோ என்று எண்ணினான். நேராக வீடு திரும்புவதன்றி சுன் செங்குக்கு வேறுவழி ஒன்றுமே தோன்றவில்லை.

அந்நிலையில் அவசர அவசரமாக, முகத்திலே வழியும் வியர்வையை கையிலிருந்த துணியால் துடைத்தவாறே உள்ளே நுழைந்தாள், அழகு மங்கை சியோசிங்! கடுமையான அந்த வெய்யலில் கால்கடுக்க நீண்ட தூரம் நடந்து

13-ம் பக்கம்

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

கே: ஆந்திரத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றியடைந்ததே — இதற்குக் காரணம் நேருஜியா? தேபார்ஜியா?

டி. கார்த்திகேயன், களம்பூர்

ப: கம்யூனிஸ்டுகளின் கொள்கைக் குழப்பம் தான்; காங்கிரஸ் வெற்றிக்கு பெருந்துணையாய் நின்றது.

*

கே: ஐயா, பலநிறம் காட்டும் பச்சோந்திகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

—வி. சுப்பையா, விளாம்பட்டு

ப: தோழரே, நீங்கள் குறிப்பிடும் அந்தப் பச்சோந்திகளைப் பார்த்ததில்லை. ஆனால் அரசியல் உலகிலே சில பச்சோந்திகளை பார்த்திருக்கிறேன்.

*

கே. முதல் மந்திரி காமராச நாடாருக்கு திராவிடநாடு பிடிக்குமா?

—டி. பி. நாதன், குடந்தை

ப: திராவிடம் தனி உரிமை பெற்று விட்டால் ஆச்சாரியாரே முதன் முதலில் கைலாகுகொடுக்க முன் வருவாரென்றால், காமராசருக்குத்தானா பிடிக்காது.

*

கே: இந்துக் கடவுள்கள் தவிர மற்ற கடவுள்கள் சோறு—பலகாரம் சாப்பிடுகிறதா?

— எம். குணசீலன், மதுரை

ப: இந்துக் கடவுள்கள் மட்டும் சோறு பலகாரம் சாப்பிடுகின்றன என்று உமக்கு யார் சொன்னது? கடவுள் பெயரைச் சொல்லிப் புரோகிதர்கள் தங்கள் வயிற்றை வீங்க வைத்துக் கொள்கிறார்களேயன்றி வேறில்லை.

*

கே: இந்தியாவிலிருக்கும் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களில் நீண்ட காலமாக தொடர்ந்து பதவியில் இருந்து வருவது யார்?

—ஆர். செங்குட்டுவன், திருச்சி

ப: சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரான டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள்தான்.

*

கே: அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெறுவார்களா?

—சி. ராஜாராம், விழுப்புரம்

ப: கம்யூனிஸ்டுகள் தங்களின் போக்கிலிருந்து திருந்தினால். ஓரளவாவது வெற்றி பெறக் கூடும்.

*

கே: அஞ்சா நெஞ்சனே, மதுரைத் தி. மு. கழகத்திலிருந்து ராஜிநாமா செய்துள்ள நாலைந்து பேர் தி மு. கழகத்தைக் குறை கூறியிருக்கிறார்களே இதற்கு என்ன பதில் கூறுகிறீர்?

—எஸ். ரங்கநாதன், வடசென்னை

ப: தங்களின் தவறை உணர்ந்து திருந்தும் பண்பு பெறாதவர்கள் பிறரைத் தூற்றுவதில் ஆச்சர்ய மொன்றுமில்லை தோழரே.

*

கே: காங்கிரசை சுத்தப்படுத்த பெரிய தலைவர்கள் கூடி கமிட்டி போட்டிருக்கிறார்களாமே இவர்கள் எப்படி சுத்தம் செய்வார்கள் தெரியுமா?

பி. கண்ணப்பன், தாமரைக்குளம்

ப: காங்கிரசைச்சுத்தம் செய்து வரும் விதத்தை நீர் கவனிக்கவில்லையா! தோழர்கள் என். ஜி. ரங்கா கட்சி, பிரகாசம் கோஷ்டியினர் எல்லாம் காங்கிரசில் வரவேற்கப் படுகிறார்களே — அதுதான் சுத்தம் என்பது! இந்த சுத்தத்திற்கு மெருகு கொடுப்பது போல ராஜாக்களும், சேட்ஜிக்களும் காங்கிரஸ் தலைவர்களால் கைலாகு கொடுத்து வரவேற்கப் படுகிறார்களே — இதற்குத்தான் சுத்தப்படுத்துவது என்று பெயர்.

*

கே: அஞ்சா நெஞ்சனே, உங்கள் கட்சி கேட்பதைப்போல திராவிடநாடு கிடைத்துவிட்டால் அதற்கு தலைநகரம் எங்கே யிருக்கும்?

—எம். டி. கேசவன், பெங்களூர்

ப: கேசவனாரே, முதலில் திராவிட நாட்டுப் பிரிவினையைப்பெற நீங்களும் பணியாற்றுங்கள். அதற்குப்பின் தலைநகரப் பிரச்னையை ஆந்திர, கேரள, கன்னட தமிழகத்தினர் ஒன்றுகூடி முடிவு செய்வோம்.

*

கே: காமராச நாடார் கவர்னர் பதவியில் இருப்பதற்கு சாமர்த்தியம் இருக்கிறதா?

—சி. வீராசாமி, திருவள்ளூர்

ப: தாங்கள் என்ன கவர்னர் பதவி கர்த்தாவா? தோழர் காமராசர் முதலமைச்சர் பதவியை ஏற்றுப் பணியாற்றி வருகிற போது—கவர்னர் பதவி வகிப்பதா சிரமம்! சுயராஜ்யக் குடியரசில் கவர்னர் பதவி வெத்துவேட்டாக யிருக்கிறதென்பது உமக்கு தெரியாதோ!

புரட்சி விழா

''அன்பான காதலனே! என்னாசை கோமானே!
நந்தவன மெத்தையிலே நாம் சேர்ந்து அனுபவித்த
இன்பத்தால் என்வயிற்றில் இப்போது சினைதரித்து
இருக்கின்ற தென்செய்வேன்? என்னிதய எழிலரசே!

அங்கிங்கு அலைந்தோடி அரும்பாடு பட்டுசிறு
குச்சுகளைக் கொண்டுவந்து கூண்டாகப் பின்னியதில்
செங்கரும்பு சக்கை, பஞ்சு, நாரமைத்து சீராக்கும்
திறமுமக்கு இல்லை; யதில் முட்டையிட்டு நெடுநாட்கள்

அடைகாத்து நம்மருமை செல்வங்களைப் பெற்றெடுத்து
ஆளாக்கும் பெருந்தொல்லை நானேற்கேன்; ஆகலினால்
உடனடியாய் ஒருபாயம் உரைத்திடுவீ!'' ரென்று குயில்
பேடைதன் பிரியனிடம் புகன்றதுவே பெருந்துயராய்

''கண்ணாட்டி கோகிலமே! என்னாசை கோமளமே!
உன்வாயால் சொன்னதெலாம் உண்மைதான் ஒத்துக்கொண்டேன்
தென்னாடு என்றஇடம் தெரியுதுபார்; அங்கிருக்கும்
திண்ணியதோர் காக்கையினம் தீரத்தில் உதாரத்திலே

மானத்திலே மேதையிலே மற்றெல்லா கலைகளிலே
மாட்சிமிக்கோ; ருழைக்காமல் நம்போல சூழ்ச்சியிலே
கோணல்வழி நாடமாட்டார்; கடவுள்வழி பாட்டினிலே
கலாச்சாரம், பண்பாட்டில் முற்றிலும் வேறுபட்டோர்

அத்தகையோர் நாடு சென்று அங்கெலாம் நொந்து அவர்
ஆக்குகின்ற கூண்டினிலே அவர்சினையில் நம் சினையை
நித்தமும் கலந்துவிட்டால் நெல்லுக்கு இறைக்கின்ற
நீரிந்தக்கருப்பை புல்லுக்கும் பொசியும் பார்!

என்றியம்பி பிரியக்குயில் பேடையுடன் தென்னோக்கி
எழுந்ததுவே; எழில்மிக்க இடத்தினிலே எங்கெங்கும்
குன்றுயென செந்நெலும், கோதுமையும், கேழ்வரகும்
அன்றலர்ந்த மலர்க்காடும் மற்றனைத்தும் கண்டனவே!

என்னிதய வானத்தின் எழில்மிகுந்த சந்திரனே
இன்பபுரி இந்நாடு இதனைவிட்டு நாம்பிரியோம்
கண்ணிவைத்து பறவைகளைக் கூண்டிலடைப் பதுபோல
கடவுள்களை பலசொல்லி காக்கைகளைக் கைலாசம்

வைகுண்டம் சொர்க்கத்திற்கு வரவேற்று மதிமயக்கி
வைதீக இருட்டறையில் விழிபொதித்து வாயடைத்து
இலௌகீக சுகமறைத்து பிரிவினைகள் உண்டாக்கி
துவண்டுஉயிர் துடிதுடித்து அவரிருக்கச் செய்கின்றேன்

அச்சமயம் அவரில்லம் அடைந்துதினம் உன் சினையை
அச்சினையோ டொன்றாக்கு! இச்சைமிகும் எழிலணங்கே!
மெச்சுகின்றோம் அவராற்றல், மேம்பட்ட முறைகளெலாம்;
துச்சம்தான் நாமவர்முன் என்றாலும் சூழ்ச்சியிலே;

வஞ்சகத்தில் நம்மினத்தை மிஞ்சமாட்டார் உண்மையிது;
வானளந்த தேவனருள், வள்ளிமண வாளனருள்?
கொஞ்சுமொழி கோகிலமே! அஞ்சாதே போகின்றேன்
கண்ணியிலே காக்கை வந்து பின்னிக் கொண்ட போதினிலே

கோவிந்தன் ஊதுகின்ற குழலோசை போலஒரு
குரலெழுப்பு கின்றேன்நான் கடிதிலேஉன் செயல்முடித்து
கூவிபறந் தோடிவா!'' குயிலழகன் கூறினான் பின்
மேவினது போலெல்லாம் முடிந்ததுவே சுபமாக

நித்தநித்தம் சுகிக்கின்ற சுகம்மறந்து முட்டைகளை
நேத்திரம்போல் காத்துகுஞ்சு பொரித்ததுவே பெண்காக்கை
உத்தம காக்கை ஐயா ஊரெல்லாம் சுற்றிசிறு
உணவுகொண்டு வந்திடுவார்; காத்திருந்து வஞ்சக்குயில்

குஞ்சுகளே உண்டுகொழுத் திருந்தனமெய் காக்கைகுஞ்சு
கள்ளளும்புக் கூடாக காட்சியளித் ததுகண்டு
சஞ்சலமும் சந்தேகம் கொண்டார் சின்னாட்கள்பின்
தோற்றத்தில், கூவுகையில் வேற்றுமையைக் கண்டார் அக்

காக்கைகுஞ்சின் அன்னையும் கண்டுவிட்டார் வஞ்சகத்தை
கொதித்தெழுந்தார்; தன்னினத்திற்குண்மைதனை உணர்த்திவிட்டார்
தூக்கத்தில் ஆழ்ந்திருந்த காக்கையினம் விழித்தெழுந்து
துரோகிகளைத் துரத்தியடித் தோட்டியது திராவிடத்தில்

உழைக்காமல் உண்டுகொழுத் திருந்த குயில் இனம் வடக்கே
உயிர் பிழைத்து ஓடியது உடன் கடவுள் உருவங்களும்
விழல்பழக்க வழக்கங்களும் வீழ்ந்தடித்து ஓடின; பின்
விழா கொண்டாடியது அந்நாளே காக்கையினம்

புதுமைக்கோமான்

வானம் வறண்டால்?

கோ. முத்து B. A.,

மருத்துவமனை. அங்கே நல்ல உணவு வழங்கினார்கள். தொண்டர்களும் அன்பொழுக நடந்து கொண்டார்கள். என்றாலும் எனக்கு அங்கே தொடர்ந்து தங்கியிருந்தது துன்பத்தையே தந்தது. என்னை 'நோயாளி' என்று எல்லோரும் குறிப்பிட்டார்கள். அந்த ஒரு சொல்லே என் மனதை வாட்டப் போதுமானதாக இருந்தது. என்னைப் பார்க்க நண்பர்களும் உறவினர்களும் வந்தனர். ஆனால் அவர்களும் குறிப்பிட்ட நேரங்களிலேதான் வரமுடிந்தது—அதுவும் நுழைவுச் சீட்டு பெற்று வந்தவர்களில் சிலர் என்னைப் பார்த்து இரக்கப்பட்டார்கள். அப்போது என்நோய் மிகுதியானதாகவே நான் நினைத்தேன். நோயை மறந்து நான் பேசிக் கொண்டிருக்கும் வகையில் என்னோடு உரையாடுவோர் மிக அரிதாக இருந்தனர்.

சிறைச்சாலைக்கும் மருத்துவமனைக்கும் மிகுதியான வேற்றுமையில்லை என்றே கருதுகின்றேன். ஊரெங்கும் ஓடித்திரிந்த ஒருவனைத் திடீரென ஓர்நாள் மருத்துவமனைக்குள்ளே பூட்டிவிட்டால் அங்கே அவன் வாழ்கின்ற வாழ்வு ஒரு சிறைவாழ்வு தானே! அவன் மனம் எங்கெல்லாமோ தாவித் தாவிச் செல்லும். ஆனால் உடல் மட்டும் அசையாது! மருத்துவர் மனமிரங்கினால் தான் விடுதலையுண்டு! ஆனால் பெரும்பான்மையான விடுதலைகள் இந்த உலகத்தை விட்டுச் செல்லும் விடுதலையாகவே முடிந்து விடும்! நல்ல வேளையாகவோ அன்றி கெட்ட வேளையாகவோ நான் என் வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டேன்!

நான் மருத்துவமனையில் இருந்த சமயம் பொழுதைக் கழிப்பதே ஒரு பெருந் தொல்லையாக இருந்தது. சிறை வாழ்வில் தானே நல்ல ஓய்வு கிடைக்கின்றது! அதைப் போலவே ஊசியும், மருந்தும், சோதனையும் போக்கிய நேரம்போக மற்ற நேரமெல்லாம் ஓய்வாகவே அமைந்தது. அன்றாடம் வெளிவரும் செய்தித்தாள் சிறுதுணையாக இருந்தது. பெருந்துணையாக எனக்கு வள்ளுவர் தான் உதவினார். நாள்தோறும் ஒரு அதிகாரத்தை ஓதி உணர்ந்தேன்! வள்ளுவர் குறளின் கருத்தாழம் காணக்காண உடல் நோயின் கடுமையும் சிறிது சிறிதாக உதிர்ந்து கொண்டே வந்தது போலும்!

நாலைந்து நாட்களுக்கு ஓர்முறை உச்சிப் பொழுதிலே ஓர் தோழன் மருத்துவமனைக்கு வந்து கொண்டிருந்தான். ஊர்பேர் தெரியாத அந்த நண்பனே இந்தக் கட்டுரைக்குக் காரணமாவான். அடுக்கடுக்காகப் பழைய பத்திரிகைகளும் புத்தகங்களும் அவனிடம் இருந்தன. என்னிடம் தவறாது வந்து அவன் தன் கடையை விரிப்பது வழக்கம். நானும் கண்ணிற்கினிமை தரும் படங்களுடன் பொலிந்த சில பத்திரிகைகளை எளிய விலையில்—அவை பழையன ஆகையால்—வாங்கிப் படித்தேன்! அவன் கொண்டு வந்த பத்திரிகைகளும் புத்தகங்களும் சொல்லிய கதைகளைவிட அவனே நேரில் கூறிய கதைகளே மிகுதி என்று கூறலாம். ஏனென்றால் அரை மணி நேரம் அவன் என் அறையில் இருந்தான் என்று வைத்துக் கொண்டால், அந்த அரை மணி நேரமும் ஒரு வினாடி கூட வீணாக்காமல் அவன் பேசித் தீர்த்து விடுவான். நோய் தவிர மற்ற செய்திகளைப் பற்றிப் பேச எனக்குந்தான் ஒரு ஆள் தேவையாக இருந்ததே!

ஓர் நாள் தோழன் தொடுத்தான் தன் கதைகளை! "நான் பணத்தை மதிப்பதில்லை, சார்" என்று தொடங்கினான். எனக்கு வியப்பாக இருந்தது. வறுமையில் வாடும் இவனுடைய சொற்களின் மிடுக்கை எண்ணினேன் "எனக்கு இந்தச் சென்னையில் உள்ள பெரிய மனிதர்களை யெல்லாம் தெரியும்" என்று சொல்லி பட்டியலையும் கொட்டினான்! அவர்கள் தேர்தலில் வாகை சூட நான் வியர்வை சிந்தியுள்ளேன், வெற்றி பெற்ற அவர்கள் நன்றி மறவாது பணத்தை வாரி வழங்க முன் வந்தார்கள். பணம் இன்று வரும் நாளை போகும். எனக்கு அது வேண்டாம் என்று சொல்லி நான் மறுத்து விட்டேன் என்று கூறி முடித்தான்.

அத்துடன் அவன் நிறுத்தி விட்டான் என்று நான் எண்ணி ஏமாந்தேன். அவன் விடுவதாக இல்லை! "என்ன சார் நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா? பணம் முதன்மையானது இல்லை. தண்ணீர் தான் முதன்மையானது! இதை மறந்துவிடாதீர்கள். நான் 'வானம் பார்த்த சீமை'யைச் சேர்ந்தவன். பல ஆண்டுகளாக வான் பொய்த்து விட்டதால் நான் இங்கு ஓடி வந்தேன். ஏதோ உங்களைப் போன்றாரின் அன்பினால் கவலையின்றி காலங் கழிக்கிறேன்" என்று சொல்லிவிட்டு விடைபெற்றான்.

"தண்ணீர்தான் முதன்மையானது" இந்தக் கருத்து என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. இந்தக் கருத்தை ஒரு தோழன் தன் வாழ்க்கையில் அனுபவித்துக் கண்டு பிடித்திருக்கிறான். ஆடம்பரமில்லாத அந்த தோழன் அழகியகருத்தை அயர்வின்றி சொல்லிப்போனான். தனிமையாக இருந்த என்னுடைய உள்ளத்தை இந்தக் கருத்து எந்நேரமும் பற்றி நின்றது. தண்ணீரில்லாவிடில் என்னென்ன இடையூறுகள் நேரிடும் என்றெல்லாம் எண்ணி எண்ணித் திகைத்தேன் சட்டென பேரொளி தோன்றியது. வள்ளுவர் கைநீட்டி அழைத்தார்!

"ஏனப்பா திகைக்கின்றாய். குறளைப் புரட்டு. இரண்டாவது அதிகாரம் என்னவென்று பார்" என்று அவர் என்னிடம் கனிவாகக் கூறியதுபோல் தோன்றியது. ஆம் 'வான்சிறப்பு' இதை வள்ளுவர் விளக்கியுள்ளார். அந்த அதிகாரத்தில் அமைந்துள்ள பத்து முத்துக்களையும் ஒன்றுவிடாமல் உங்கள்பார்வைக்குவைக்க நான்இப்போது முன்னிற்கவில்லை. நீங்களே அவற்றைக் கண்டு, அணிந்து களிப்படைவீர்கள்.

குறளிலேஉள்ள 133 அதிகாரங்களிலே இரண்டாவது அதிகாரம் "வான் சிறப்பு"—அதாவது "மழையின் பெருமை." "தண்ணீர்தான் முதன்மையானது. பணமன்று" என்ற என் "ஏழை" நண்பனின் சொற்களையும் ஒப்பிட்டு மகிழ்வோமாக! 'நீர்'தான் முதன்மையானது என்றால் ஏன் அதற்கு வள்ளுவர் இரண்டாவது இடங் கொடுக்க வேண்டும் என்று கேட்கத் தோன்றும். நீரைவிட காற்றுதான் மிகவும் தேவை என்று சொல்லத்தோன்றுமல்லவா? ஆகவே தான் நீருக்கு இரண்டாவது அதிகாரம் போலும். அப்படியானால் முதல் அதிகாரம் காற்றைப் பற்றி யல்லவா இருக்கவேண்டும். ஏன் அது கடவுள் வாழ்த்தாக இருக்கிறது. என்றெல்லாம் கேட்கலாம். கேள்விமேல் கேள்வி கேட்டு விடைதேட முயன்றால்தான் புத்தம் புதிய உண்மைகள் புலப்படுமல்லவா?

கடவுள் பற்றிய வள்ளுவர் கருத்தைத் தனியே ஆராயவேண்டும். மழையின் பெருமை கூறவந்த வள்ளுவர் நம்மை "வானோர்" வரையில் அழைத்துக் கொண்டு செல்கின்றார்.

நீரில்லாவிட்டால்—வானம் வறண்டால்—என்ன ஆகும்? மண்ணுலக மாந்தரெல்லாம் நைந்து போவர். விண்ணுலகை விட்டு இப்பூவுலகை நண்ணிய தேவர்களும் திண்டாடுவார்களாம்! வள்ளுவர் கூறும் தெள்ளிய கருத்தைப் பாரீர்! மழை பெய்தால் தான் நாட்டில் செல்வம் செழிக்கும் நீரற்றால் பொருளற்றுப் போகும். பொருளற்றார் தெய்வத்தை நினைக்க மாட்டார். வழிபாடு செய்யமாட்டார். திருவிழாக் கொண்டாட மாட்டார். இந்திரன் முதலிய தேவரைத் தேடுவார் யாரும் இரார்! தேவர்கள் பரிதாபத்திற்குரியவர்களாகி விடுவார்கள்! நீரின் பெருமையை இன்னும் எப்படிச் சொல்ல முடியும்? தேவர்களும் இயற்கையன்னையின் அன்பினால் வாழவேண்டியவர்களே என்பதை வள்ளுவர் நயமாகக் குறிக்கின்றார் போலும்.

விளக்கிக் கொண்டிருப்பது வீண் வேலை குறுகிய குறள் பெருகிய கருத்துக்களைத் தானே எடுத்துக்கூறும். ஆகவே பாட்டைப் படியுங்கள்!

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

இரு துருவங்கள்—தொடர்ச்சி

எழுந்தால் போதும் உடனே எல்லாம் குணமாகி விடுமாம்! இது ஏசுகிறிஸ்துவின் கிருபை என்று சொல்லுகிறது. 'ஏற்பாடுகள்'

இப்படிப்பட்ட கதைகள் 'பைபிள்' போன்ற நூலில் இருக்கிறது. படிக்கவும் செய்கிறார்கள்! ஆனால் அது காலத்திற் கொவ்வாதது—நம்பக் கூடாத ஒன்று என்று கருதுகின்றனர். அதனால் தான் பரம பாதத்தை விரும்பாமல் மனிதனின் ஆற்றலால் உண்டாக்கப்பட்ட—விஞ்ஞான உபகரணங்கள் நிறைந்த பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர்!

'ஹெலன் செவிடு, குருடு பள்ளி சென்றார், உலகம் வியக்கப் பாராட்டப்படுகிறார்' என்றுதான் காட்டுகிறார்களே தவிர ஆண்டவனின் அனுக்கிரகத்தால்தான் இப்படி என்று எடுத்துக் காட்டவில்லை!

நமது மெய்யன்பர்கள் அப்படியில்லையே! தெய்வ முலாம் அல்லவா பூசிவிடுகின்றனர்! பகுத்தறிவுக்கு முரணானதை அல்லவா கூறுகின்றனர். பேசாத குமர குருபரர் முருகனின் கடாட்சத்தால் திடீரென பேசினார் கவிதை இயற்றினார் என்றால் யார் ஒப்ப முடியும்? ஒப்ப முடியாது என்பதற்கு ஹெலன் கெல்லர் போன்றவர்களே சாட்சி!

குமரகுருபரர் பிறந்தது—கவிதை இயற்றியது உண்மை! [கவிதையின் தராதரத்தை இப்போது கவனிக்க வேண்டாம்] ஆனால் அதற்கு மயில்வாகன மகேசனின் அருள்தான் காரணம் என்றால் எப்படி ஒப்ப முடியும்! இந்த நூற்றாண்டிலுமா மெய்யன்பர்கள் வாழ்க்கை வரலாற்றை இப்படிச் சொல்வது ரேடியோக்கள் ஒலிபரப்புவது?

இப்படி நம்பொணாத கதைகளை கட்டிவிட்டிருப்பது ஒன்றா இரண்டா?

ஞானசம்பந்தர்—3-ம் வயதில் ஞானப்பால் அருந்தி தெய்வத்துதி பாட ஆரம்பித்தாராம். மெய்க்கண்டார் 5-ம் வயதிலேயே அந்தயில்வாழ்வு கொண்டோனின் அருளால் திருஞான போதத்தைப் பாட ஆரம்பித்தாராம். இப்படி சாதாரணமாக நடமாடிய மனிதர்களை எல்லாம் கடவுட்கிருபை பெற்றவர்களாக சித்தரித்து நமக்கு அறிவுறுத்தி வருகிறார்கள்—தொண்டர் அடியார்கள்!

ஜெமினியார் கூட—பிறந்த குழந்தையான ஔவை உடனே—கொட்டு மழையில பாட்டு இசைக்க ஆரம்பித்து விட்டதாகப் படமே பிடித்துக் காட்டி விட்டார்—இப்போதுதான் நடந்தது போல! இதுதான் உண்மை எனப் போற்றும் மக்கள் ஏராளம்!

இது காலத்திற்கு ஏற்ற ஒன்றா! உலகம் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒன்றா? அதையும் பாருங்கள்—இதையும் பாருங்கள்! மிஸ்ஹெலன் கெல்லரின் வாழ்க்கையையும் பாருங்கள்! குமரகுருபரரின் வாழ்க்கையையும் பாருங்கள்! ஒன்றை ஒன்று பொருந்த முடியாத, இரு துருவங்களாகத்தானே மெய்யன்பர்கள் கதை கூறுகின்றனர்! இருக்க[illegible] இது!

—க. வெ[illegible]யன்

நாடு என்றால் என்ன?

எம். எஸ். ராமசாமி

7

இந்தி, அரியாசனமேறி ஆட்சி செலுத்தும்போது இந்திக்கும், இந்தி மொழியாளருக்கும் ஏற்படும் பெருமை, அதிகாரம் ஆகியவற்றில் எள் மூக்களவாவது திராவிட மொழிக்கும் திராவிடர்க்கும் ஏற்படுமா?

இந்தி ஆட்சி மொழியானல், இந்திக்காரன் ஆரம்பப் பள்ளியில் படித்திருந்தாலுங்கூட, இந்திய அரசாங்கத்தில், ஏதாவது உத்தியோகம் வகித்துக் கொள்ள தகுதியுடையவன் ஆவான். அவனுக்கு, மேலும் கொஞ்சம் ஆங்கிலம் படிக்க வசதி ஏற்பட்டால், அயல் நாட்டுத் தூதுவர் வேலைக்கும், வெளிநாட்டு வாணிகத்திற்கும் தகுதியுடையவன் ஆவான்.

இந்தி ஆட்சிமொழியானல், திராவிடன் ஆரம்பப் பள்ளியில் படித்துவிட்டு உத்தியோகம் வகிக்க முடியுமா? முன் சொன்ன இந்திக்காரனுக்கு ஏற்பட்ட தகுதி, திராவிடனுக்கு வேண்டுமானல், தாய்மொழி, இந்தி ஆங்கிலம் ஆகிய 3 மொழி கற்க வண்டுமே! இந்தியில் ஓரளவு அறிவு பெற வண்டுமானல் இந்திக்காரனைப்போல் ஆரம்பப் பள்ளியிலேயே திராவிடனல் பெற முடியாதே! தாய்மொழி கற்பது எளிது! பிறமொழி கற்பது சிரமம்! ஏற்னவே, கல்வியில் பிற்போக்கடைந்துள்ள திராவிடன், இந்தி வந்தால் உருப்படுவானு?

இப்போது இருப்பதுபோல், ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்தால், இந்தியர்கள் எல்லாருக்குமே சமஅளவு சிரமமும்—செலம் இருக்கும். இதுபோய் இந்தி வந்தால், இந்திக்காரனுக்கு எளிது. அவனுக்கு தாய்மொழியோடு ஆங்கிலமும் கற்றல் உலக மேதையாகி விடுவான். திராவிடனுக்கோ தாய்மொழியோடு ஆங்கிலம், இந்தி இரண்டும் பயில வேண்டும். இது என்ன நீதி என்று நாம் கேட்பதை மழுப்பவே, வடவர்கள் திராவிட மொழி கற்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

இந்தி கற்றல், உத்தியோகம் கிடைக்கும்—ஊதியம் கிடைக்கும், என்று ஆர்வத்தோடு படிப்பான், திராவிட மொழி கற்பதால் என்ன கிடைக்கும்? என்ன ஆர்வம் ஏற்படும்? நம்மைத் திருப்தி செய்வதுபோல் ஏமாற்றுகிறார்கள் என்பதைத் தவிர வேறு என்ன காரணம் சொல்ல முடியும்?

பெரிய பையனுக்கு 'பியூக் கார்' வாங்கிக் கொடுத்து விட்டு, சின்னப் பையனுக்கு 'பொம்மைக்கார்' வாங்கிக்கொடுத்து, ஏமாற்றும், ஓரவஞ்சனைத் தகப்பன் செய்கைபோல் இருக்கிறது அவர்கள் பேச்சு! இந்த பொய்மால வார்த்தைகளால், திராவிடன் எவனும் மயங்கிவிடப் போவதில்லை! வடவரும் இந்த 'திராவிட மொழிப் படிப்பு' என்கிற நாடகத்தில் நடிக்கப் போவதும் இல்லை! பாராளுமன்றில், இதர மொழியாளர்களை அவர்கள் படுத்துகிற பாடே இதற்குச் சான்றாகும். இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் ஆவடிக் காங்கிரஸ் மாநாட்டு நடவடிக்கைகள் உள்ளன.

தமிழ் நாட்டில், காங்கிரஸ் கரைந்து போனதை சரிப்படுத்தலாம் என்ற நோக்கத்தோடுதான் ஆவடியில் 60-வது மாநாட்டைக் கூட்டினார்கள். தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து, ஆவடியைப் பார்க்கப் போனார்கள். அங்கே என்ன நடந்தது? தமி[illegible]—தமிழி[illegible]சிய போதெல்லாம் இந்தியர்கள்[illegible]ல் போட்டு 'கலாம்' விளைவித்திருக்கிறார்கள்! சென்னை கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம் சற்று முன்கோபமும், பிடிவாத சுபாவமும் உள்ளவர். அவரையே தமிழில் பேச வொட்டாமல் தடுத்தனர் என்றல், இதை வைத்துக் கொண்டே வடவரின் ஆதிக்க வெறி எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறதென்று ஊகித்துக் கொள்ளலாம்.

வடஇந்தியாவில் பம்பாய், ஆமதாபாத் முதலிய இடங்களில் பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கூலி வேலையின் காரணமாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள்:-

"நான்கு பேர் வடவர்கள் கூடியிருக்கும் இடத்தில், நான்கு பேர் தமிழில் பேசினல் "மதராஸ்வாலா, அண்டுக்குண்டு தண்டாபாணி" என்று தமிழர்களையும், தமிழ் மொழியையும் கேலி செய்கிறார்களாம்"

இந்தியாவின் நானுபக்கத்து நிலைமைகளையும், மனோபாவங்களையும். அறிந்தவர் பண்டித நேரு. ஓரளவு நேர்மையானவரும் கூட. அவர் உயிருடன் இருக்கும் போதே—இந்தியாவின் முதன் மந்திரியாய் இருக்கும் போதே — திராவிடம் இகழப்படுகிறது—புறக்கணிக்கப்படுகிறது - - என்றல், பண்டித நேருவின் காலத்திற்குப் பின்னல், திராவிடத்தின் 'கதி' எப்படிப்பட்டதாக இருக்கும்? சிந்திக்க வேண்டாமா?

இதுவரை கூறி வந்த பல்வேறு ஆதாரங்களையும், கூர்ந்து நோக்குவோருக்கு, மொழிவேற்றுமை எவ்வளவு பிளவை உண்டுபண்ணக் கூடியது, எத்தகைய ஆதிக்கம் செலுத்தக் கூடியது என்று இனிது விளங்கும்.

இதனை, இத்துடன் நிறுத்திக் கொண்டு உணவுபற்றி ஆராய்வோம்.

உண்ணும் உணவு

உலகத்தில், மக்கள் பலவிதமான உணவு வகைகளை உண்கிறார்கள். சில, தயாரிப்பு பேதத்தாலும், சில, தானிய பேதத்தாலும், சில மாமிச உணவு, மரக்கறி உணவு என்கிற பேதத்தாலும் வித்தியாசப் படுகின்றன.

மாமிச உணவுகளில், சிலர் உண்ணும் மாமிசத்தை சிலர் உண்பதில்லை. உதாரணமாக, வெள்ளையர்கள் விருப்பமாக உண்ணுகின்ற பன்றிக் கறியை, முஸ்லீம்கள் கையாலும் தொடமாட்டார்கள். ஆடு, கோழி, மீன், மான் முதலிய இறைச்சிகளைத் தின்னும் உயர்சாதி இந்துக்கள் மாட்டுக்கறியை கையாலும் தொடமாட்டார்கள். நியூசிலந்து கோவாய தீவுகளில் இருப்பவர்கள், மனித மாமிசமும், நாய் மாமசமும் தின்கிறார்கள். இவைபோன்ற உணவு முறைகளினல் ஏற்படும் மனவேற்றுமை மிகமிகப் பெரிதாகும்.

உலகத்தின் பல்வேறு உணவு வகைகளிலும், தமிழன் அல்லது திராவிடனுடைய உணவுமுறை தனிச்சிறப்பும், விரிவும் கொண்டதாகும். உவர்ப்பு, கசப்பு, இனிப்பு புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்கிற ஆறு வகைச் சுவையுடன் உணவு உண்பவன் திராவிடன், தமிழில் 'அறுசுவையுண்டி' என்று சிறப்பாகச் சொல்லப்படுவது ஆறு வகை சுவையைக் குறித்துத்தான்,

திராவிடர்களுடைய வளமான விருந்து ஒன்றுக்கு, வாங்க வேண்டிய உணவுச் சாமான் பட்டியலை, அயல்நாட்டான் எவனுவது கண்டால், உண்மையில் திகைத்துப் போவான். காரணம் : பெரும் அளவினல் அல்ல—பலவகைப் பண்டங்களால்!

உப்பு முதல் கறிவேப்பிலைவரை கணக்கிட்டால், நமது உணவில் சேரும் பண்டங்கள் நூற்றுக் கணக்கில் ஆகும்! இவ்வளவு பண்டங்களைச் சேர்த்து சமைத்து உண்ணும் பழக்கம், திராவிடம் தவிர, உலகில் எந்தப் பாகத்திலும் இல்லை என்று கூறலாம்.

நாம், நமது உணவுகளில் கடுகு, உளுந்து, வெங்காயம், சீரகம், கறிவேப்பிலை முதலியன சேர்த்துத் தாளிதம் செய்வதை விரும்புகிறோம். தாளிதத்தை — தாளித மணத்தைக்கூட வெறுக்கிறார்கள் பர்மியர்கள்!

நமது தாளித மணத்தை வெறுக்கின்ற பர்மியர், மீன்களை அழுக வைத்து, அந்த அழுகிய ஊனிலிருந்து தயாரிக்கும் 'நப்பீ' என்னும் ஒருவித ஊன் உணவை விரும்பி உண்கிறார்கள்! அந்த நப்பீயின் நாற்றத்தை சகிக்கவே முடியாது என்கிறார்கள் திராவிடர்கள்!

ஆங்கிலேயர்கள் பன்றி, மாடு, கோழி, ஆடு முதலியவற்றை அப்படியே கால், குடல் முதலியவற்றை நீக்கி, முழுமுண்டமாக வேக வைத்து உப்பு, மிளகு தூளைத் தடவிக் கொண்டே தின்று விடுகிறார்கள்!

இந்த முறையில் தயாரித்துத் தின்ன திராவிடனல் முடியாது! திராவிடன் உணவில் சம்பாரங்கள் நிறையச் சேர்ந்து நன்றாக வெந்திருக்க வேண்டும்!

வடஇந்தியர்கள், பெரும்பாலும் கோதுமைப் பண்டங்களும், சிறுபான்மை உளுந்து கடலை, துவரை, பருப்பு வகைகளும் உண்கிறார்கள். அவர்கள் உணவில், மிகப்பெரும் அளவில் இனிப்பு சேர்க்கப்படுகிறது. பருப்புக் குழம்பிலும், மிளகு, தக்காளி இவைகளைச் சேர்த்துச் செய்யும் சூப்பிலும் கூட சிறிதளவாவது இனிப்புச் சேர்ப்பார்களென்றல் வடவர்கள், இனிப்பை எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறார்கள் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

வடஇந்தியரின் உணவுகளில் காய்கறிகள் கூட அதிகம் இடம்பெருது. அவர்களுக்கு, காய்ந்துபோன ரொட்டிதான் மிகவும் விருப்பமான உணவு!

திராவிடன், கோதுமையைச் சிறிதளவு தின்பண்டங்களில் சேர்த்துக் கொள்வதைத் தவிர, அன்றைய உணவாகக் கொள்ள ஒருக்காலும் உடன்பட மாட்டான்!

அது போலவே, வடஇந்தியன் அரிசியை சிறிதளவு தின்பண்டங்களில் சேர்த்துக் கொள்வது தவிர, அன்றைய உணவாகக் கொள்ள விரும்பமாட்டான்—விரும்பாதது மட்டுமல்ல—வெறுக்கிறன் — இழிவாகவும் பேசுகிறன்!

நாம், நமது உணவில் புளி சேர்த்துக் கொள்வதற்காக "அம்புளி பானி கானே வாலா" என்று வடவர்கள் கேலி செய்கிறார்கள்!

அதுபோலவே, வடவர்கள் மத்தியில் தொழிலின் காரணமாகப் போயிருக்கும் நம்மவர்கள் 'சுக்கா ரொட்டி கானே வாலா' என்று வடவர்களின் ரொட்டி உணவைக் கேலி செய்கிறார்கள்.

("அம்புளி பானி கானே வாலா' என்றல், புளித்தண்ணீர் உண்பவர்கள் என்றும் 'சுக்கா ரொட்டி கானே வாலா" என்றல் காய்ந்த ரொட்டி தின்பவர்கள் என்றும் பொருள்)

அரிசிப்பங்கீடு அமுலில் இருந்த காலத்தில், திராவிடர்களிடம் நிர்ப்பந்தமாகத் திணிக்கப்பட்ட கோதுமை—குறிப்பாக உணவு விடுதிகளுக்கு வழங்கப்பட்ட கோதுமை — சப்பாத்தியாக உருவெடுத்து, எச்சில் தொட்டிகளில்தான் நிரம்பிக் கிடந்தன.

ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

திராவிடப்பித்தன்

6

"இனி, ஐந்திணைப் பொருள்களிலும் குறிஞ்சித்திணை களவுபகுதிக்கும், முல்லை நெய்தல்கள் கற்புப் பகுதிக்கும், பாலை களவு கற்பென்ற இரண்டற்கும் பெரும்பான்மை புலனெறி வழக்கஞ் செய்யப் படுவனவாம். இவற்றுட் பாலை யொழுக்கமாகிய பிரிவு களவு கற்புக் காலங்களில் நிகழ்தற்குரிய பொதுவொழுக்கமாதலால், அதனைப்பற்றி ஆசிரியர் கூறிய விதிகளும் ஈண்டே அறியத்தக்கவை. இப்பாலையாகிய பிரிவு—ஓதல், பகை, தூது, காவல், பொருள் என்பவைபற்றி நிகழும். இவற்றுள் ஓதற் பிரிவு சூத்திரரொழிந்த ஏனை வருணத்தார்க்கு உரித்தெனவும் (26) பகைமேற் பிரிவும் காவற் பிரிவும் அரசர்க்கே உரித்தெனவும் (27—28) பொருள் வயிற் பிரிவு வணிகர்க்குச் சிறந்தும் ஏனையர்க்குப் பொதுவாயும் வழங்குமெனவும் (29) குறுநில மன்னர்க்கு அரசர்க்குரிய பிரிவுகள் உண்டென்றும் [32] கூறுவர்."

'.........இனி, ஓதற்குப் பிரியும் பிரிவில், அந்தணர், அரசர், வணிகரென்ற மூவரும் வேதங்களும் வேதத்துப் பிறந்த வடநூல்களும் கற்றற்குரியரென்பதும், உயர்ந்த வேளாளர் அகத்திய முதலிய தமிழ் நூல்கள் கற்றற்குரியவர் என்பதும் "உயர்ந்தோர்க்குரிய ஓத்தினான" என்ற சூத்திரத்தினுரையால் தெரியலாம். 'ஓதற் றொழி லுரித் துயர்ந்தோர் மூவர்க்கும்—அல்லாக்கல்வி எல்லார்க்குமுரித்தே' என்றார் நம்பியாரும். இப்பிரிவு தலைவனும் தலைவியும் வரைந்து கொண்டபின் முதலில் நிகழ்வதென்பர் பேராசிரியர். இனிக் களவியலுரைக்காரர்—ஓதல் காவல் பகை —தணிவினை வேந்தற்குற்றுழி, பொருள், பரத்தை எனப் பிரிவாறுகூறி, இவற்றுள் ஓதலை அந்தணர் அரசர்க்கும் காவலை அரசர்க்கும் தூது பரத்தையர் பிரிவுகளை நால்வருக்கும் வேந்தர்க்குற்றுழி பொருட் பிரிவுகளை வணிகர்வேளாளர்க்கும் உரிமை படுத்தினர். (சூத்திரம் 35—39)

"இனி ஓதல் தூது பொருட் பிரிவுகளிடத்தும், பலவாறு சூழ்ந்து போர் குறித்து நிற்கும் பாசறையிடத்தும் தலைவி தலைவனுடன் செல்லுதல் பண்டை வழக்கமின்மையால், அங்ஙனம் புலனெறி வழக்கஞ் செய்தலில்லை, இதனை 'முந்நீர் வழக்கம் என்பதற்கு பொருட் பிரிவுக்காக கடலிலே மரக்கலத்தில் செல்லுதல் மகடூஉவோடில்லை என்று பொருள் கூறி எனவே காலிற் (தரையிற்) பிரியுமிடத்துத் தலைவியுடன் சேர்தலுண்டென்று தாற்பிரியங் கூறுவர் ஒரு சாரார் (தொல்—அகத்தி—37 இளம்பூரணர்), இங்ஙனம் கூறுமிடத்து, பொருட்பிரிவொழிய ஏனைப்பிரிகளில் மனைவியருடன் செல்லலாம் என்பது பெறப்படுமென்றும், அவ்வாறு மனைவியருடன் சென்றாராக மரபில்லையென்றும், ஆகவே 'முந்நீர் வழக்கம்' எனைபதற்கு—பெண்ணொடு செல்லத் தகாத ஓதல் தூது பொருள் என்னும் மூன்று நீர்மையான செலவு என்று பொருள் கொள்ளுதலே ஆசிரியர் தொல்காப்பியரின் கருத்தாமென்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறினார்.

'......இனி வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது' (188) என்று ஆசிரியர் கூறுதலால் கல்வியின் பொருட்டுப் பிரியும் பிரிவு மூன்றாண்டுக்கு மேற்படக் கூடாதென்பது பழைய விதியாகத்தெரிகின்றது. நச்சினார்க்கினியர் இச்சூத்திரத்திற்கு தத்துவப் பொருளொன்றை இடர்ப்பட்டுக் கூறினராயினும் வழி நூல் செய்த நம்பியார் கொள்கைப்படி (89) மூன்றாண்டென்பதே பொருத்தமாகும். இனி பகை தூது பொருள் பற்றிய பிரிவுகள் ஓராண்டுக்குள்ளாதல் வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. வடநூலார் ஓதற் பிரிவுக்கு ஆறாண்டும் அறப்புறங் காவார்க்கு எட்டாண்டுங் கூறுவர். [மனு 9, அத் 4—16]

இது ராகவையங்கார் ஆராய்ச்சி உரை. அவரது இனத்திற்கே உரித்தான பாணியில் பொருள் கூறியுள்ளார்.

இவ்வளவும் கூறியதனால் தொல்காப்பியர் காலத்து கல்வி நிலையானது தெளிவாகத் தெரியவரும். ஆரிய வருண பாகுபாட்டு மக்களான பார்ப்பனர் வைசிகர், அரசர், சூத்திரர், வேளாளர், எனப்பட்டோர் உயர்ந்த குலமக்களாக கருதப்பட்டனர், கல்வி கற்பதற்கு இக்கூட்டத்தினரே தகுதியுடையவராகக் கருதப்பட்டனர். நூல்கள் கற்கும் கல்வி உரிமை இக்கூட்டத்தினருக்கே சொந்தமாக இருந்தது. கல்வி கற்பதற்காக அந்நிய நாட்டுக்குச் செல்லும் வழக்கம் அக்காலத்தில் இருந்துவந்தது. இவ்வாறு அயல் நாடுகளுக்குச் சென்று கல்வி கற்பதும் பார்ப்பனர் முதலியோர்க்கே உரிமையாயிருந்தது. ஆனால் பார்ப்பனர்களோ கடல் கடந்து செல்வதை இழிவாகக் கருதியவர்களென வேதங்கள் கூறும். இப்படியாக பொருள் கூறியுள்ளனர் நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண நூல் ஆசிரியர்களும் தற்கால பார்ப்பன ஆராய்ச்சியாளர்களும்.

தமிழ் ஆராய்ச்சி அறிஞர்களோ வேளாளர் என்பார் சூத்திரர் ஆகமாட்டார் என்று மெய்ப்பித்துவிட்டு வேளாளரும் மற்றையோர் போன்ற உயர்ந்தவர் ஆவர் என்றும் ஆகவே வேளாளரும் கல்வி முதலிய எல்லா உரிமைகட்கும் சொந்தமுடையராவர் என்றும் கூறியுள்ளார்கள்.

தொல்காப்பிய கூற்றுப்படி பார்த்தாலும் அதாவது உரையாசிரியர் ஆராய்ச்சியாளர் ஆகியோரது உதவியின்றி ஆராய்ந்து பார்த்தாலும்—அக்காலத்தில் உயர்ந்தோர் மேலோர் என்பார் மட்டுமே கல்வி கற்கும் உரிமையைப் பெற்றிருந்தனர் என்பதும் கீழோர் இழிந்தோர் எனக் கூறப்பட்ட பெரும்பான்மை மக்கள் கல்வி கற்கும் உரிமையை அடைந்திருக்கவில்லை யென்பதும் தெரியவரும். கீழோர் இழிந்தோர் என்று கூறப்பட்டுவரும் பெருவாரி மக்களானோர் பலவாயிரம் ஆண்டுகளாக கல்வி உரிமை அற்றே வாழ்ந்து வந்தனர் என்பதும் மேல்நாட்டு வெள்ளையர் ஆட்சி ஏற்பட்ட பின்னரே இந்த இழிந்தோரும் கீழோரும் கல்வி உரிமை அடைந்தனர் என்பதும் தெளிவாகத் தெரியும். ஆகவே கல்வித்துறையில் பிற்பட்ட சமூகத்தினரின் நலனை மனதிற் கொண்டு கல்வி அளிக்கும் முயற்சிகளில் அவர்கட்கு விசேஷ கவனம் எடுத்துக் கொள்ளப்படவேண்டியது அவசியம் என்பது தெரியவரும்.

இக்காலத்தில் எப்படி பறையர் பள்ளர் என்று கூறப்படும் இழிந்த சாதி மக்களும் பிற்பட்ட வகுப்பினர் என்று கூறப்படும் படையாட்சி நாயக்கர் கள்ளர் கவுண்டர் சானார் நாடார் என்ற கீழ்சாதி மக்களும் கல்வி பயிற்சி பெறுதற்குத் தகுதியும் திறமையும் தடை யாகக்கூறப்படுகின்றதோ இதேபோல தான் பண்டைக்காலமான தொல்கா பியர் காலத்திலும் தடைகள் இருந்த ன. தமிழ் மொழியில் ஆயிரம் ஆயிர ஆண்டுகட்கு முன்பே இலக்கண இல கியங்கள் ஏற்பட்டிருந்தன என் பெருமை பேசிக்கொள்கிறோம், அப்ப பெருமைபட்டு பேசிக் கொள்வதற் காரணமாக உள்ள தொல்காப்பி உயர்ந்தோருக்குத்தான் கல்வி உரிமை என்றும் இழிந்தோர்க்கும் கீழோர்க் கும் கல்வி உரிமை இல்லை என்று இலக்கணம் வகுத்துக் காட்டியுள்ளத இதைப் படிக்கும் எவரும் மனம் புழு காது இருக்க முடியாது, தொல்கா பியம் தமிழ் மொழியின் தொன்மைக் சான்றாகக் கூட்டப்படக் கூடியதே லாமல் தமிழரின் தனிச் சிறப்பை கூறுதற்கு சான்றாகக் கூட்டக்கூடி தன்று. தொல்காப்பியத்தில் கூறப்படு உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரும் த மூரேதான் எனக் கூறினல்கூட தொல் காப்பயத்தில் கூறப்படும் வழக்குக எல்லாம் தமிழகவழக்குகள்தான் என் கூறினலுங்கூட தொல்காப்பியர் ஆரி வழி ஏகி இலக்கணம் செயயவில் தமிழ் வழியிலேதான் இலககணம் கூ யுள்ளார் என்று நிரூபித்தாலுங்கூட அப்படிக் கூறப்படும் தமிழ் மக்களி அந்தணர் அரசர் வணிகர் வேளாள என்று பிரிவு காட்டி பேசப்படுவது இப்படி பிரிவு செய்யப்பட்டவர்களி சிலர் உயர்ந்தோர் மற்றவர் தாழ்ந்தோ என பாகுபாடு செய்து காட்டப்படு தும் பரந்த மனம் படைத்த தமிழர்க ஏற்றுக் கொள்ளக்கூடியதன்று. தொல் காப்பியர்காலத்திலும் திராவிடர்க கல்வி அறிவு பெறாத மாக்களாக வைக்கப்பட்டிருந்தனர் என்பதையு இப்படி பல ஆயிரம் ஆண்டுகளா கவே இருந்துவரும் இந்த வஞ்ச ஏற்பாட்டை உடைத் தெரிந்து பு துலகப் பாதையை அமைத்து கொடுப்பதே திராவிட இயக்கத்தி குறிக்கோள் என்பதை வாசகர்க உணரவேண்டும். —தொடரு

கைத்தறி ஆடையையே அணியுங்கள்

திராவிடத்துப் பிச்சைக்காரர் கூட "கோதுமைச் சப்பாத்தி வேண்டாம்" என்று போஸ்டர் எழுதி கழுத்தில் தொங்கவிட்டுக் கொண்டு பிச்சை எடுப்பதாக ஆனந்த விகடன் கேலிப்படம் வெளியிட்டது.

கோதுமையை எப்படியாவது தெற்கே திணித்துவிட வேண்டும் என்று வடவர் அரசாங்கம், பெரும் முயற்சியும், பணவிரயமும் செய்து, கோதுமையில் பண்டங்கள் தயாரிக்கும் விதங்களைப்பற்றி வானொலி மூலம் இராப்பகலாக விளக்கியும் பயனில்லாமல் போயிற்று.

'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவேரி வெற்றிலைக்கு மாறு கொள்ளு
[வோம்

என்று, கோதுமையின் மதிப்பை வெற்றிலைக்கு ஒப்பிட்டுப் பாடினார் பாரதியார்.

திராவிடத்தில் அவ்வளவு கேவலமாக மதிக்கப்படுகிற கோதுமை, வடஇந்தியாவில் உயர்வாகக் கருதப்படுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னால், மத்திய மந்திரியாக இருந்த திரு. முன்சி என்பவர் "அரிசி உணவு உண்பவர்கள் அநாகரீகர்கள்" என்று தமது வாய்க் கொழுப்பை வெளியில் கக்கியதால் திராவிடத்தின் பலமான கண்டனத்திற்கு ஆளான செய்தி உலகறிந்த ஒன்று.

மேலே கண்ட செய்திகளெல்லாம் வட இந்தியாவும், தென்னிந்தியாவும் ஒன்று—ஒரே நாடு—என்று காட்டுமா?

இதை இவ்வளவோடு நிறுத்திவிட்டு உடை வித்தியாசத்திற்கு வருவோம்.

உடுக்கும் உடை

உடுக்கும் உடை, பெரும்பாலும் அவரவர் வாழும் இடத்திலுள்ள தட்பவெப்ப நிலைமைக்கேற்றபடி உருவாகிறது.

ஐரோப்பியர்கள், ஐரோப்பாவின் குளிருக்கு ஏற்றபடி தடித்து நீண்ட கால்சட்டையும், ஸ்டாக்கிங்சும், பூட்சும், உடம்பில் இரண்டு மூன்று மெல்லிய சட்டையும் அதற்குமேல் தடித்த கோட்டும் அணிகிறார்கள்,

இலங்கையிலும், பர்மாவிலும் உள்ள அந்நாட்டுப் பெண்கள் உடம்பில் பிடிப்பாக ஒருசட்டையும், இடுப்பில் 4 முழச் சேலையு அணிந்து கொள்கிறார்கள். அங்குள்ள ஆ கள் நமது முஸ்லீம்களைப்போலப் பெ பாலும் உடுத்துகிறார்கள்.

திராவிடனுக்கு 4 முழ வேட்டியு 3 முழத் துண்டும், மெல்லிய சட்டை ஒ றும் தற்கால உடையாக இருக்கின்றன,

திராவிடப் பெண்களில் நாகரி வாய்ந்தவர்கள் என்போர், உடம்பில் ஒ இரவிக்கை அணிந்து, இடுப்பில் ஒரு பா டையைக் கட்டி, அதன் மேல், 10 அல் 12 முழமுள்ள மெல்லிய சேலையை பாவாடை வெளியில் தோன்றாமல், ஒ சுற்று உடுத்தி மீதியை மார்பிலும் தோ லும் போட்டுக் கொள்கிறார்கள். பழை முறைப்படி உடுத்துகிறவர்களாக இரு தால் உடம்பில் ஒரு இரவிக்கை அணி தோடு, 14 முதல் 18 முழம் வரையிலுள் ஒரு சேலையை, இடுப்பில் இரண்டு சுற்று கட்டி, மீதியை மார்பிலும், தோளிலு போட்டுக் கொள்கிறார்கள்.

இவ்வளவோடு நமது ஆடவர் பெண் ரின் சராசரி உடை நின்று விடுகிறது.

—தொட

"ஜனசக்தி" அலறுகிறது

தொழிற் சங்கத் துறையில் பணியாற்ற ஆவன செய்வதென அண்மையில் நடைபெற்ற தி.மு. கழகப் பொதுக் குழுவின் முடிவைக் கண்டு கம்யூனிஸ்டுகள் அலறுகின்றனர்! இது குறித்து 'ஜனசக்தி' 13—3—55 இதழில் தோழர் கே. எம், கம்யூனிஸ்டுகளின் அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்! அப்படித் தெரிவித்துள்ள அபிப்பிராயமானது கம்யூனிஸ்டுகளின் தொடை நடுங்கித்தனத்தைக் காட்டுவதா யிருக்கிறதேயன்றி அவர்களின் நேர்மைக் குணத்தை நிரூபிப்பதாயில்லை

"தி. மு. க. வினர், இனிமேல் தனியான தொழிற்சங்கங்கள் வைக்கப்போவதாகக் கூறுகின்றனர். தொழிலாளர் இயக்கத்தில் யார் பங்கு கொள்ள வேண்டுமானாலும் வரலாம் ஆனால் தொழிலாளர் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் விதத்தில் யார் எந்த முயற்சியிலீடுபட்டாலும் அது தொழிலாளர் வர்க்கத்திற்குச் செய்யும் சேவையாகக் கருதமுடியாது........."

என்று 'ஜனசக்தி' கூறுகிறது! தொழிலாளர் இயக்கத்துக்கே கம்யூனிஸ்டுகள்தான் கர்த்தாக்கள் போல கருதிக்கொண்டு இறுமாப்பாக இப்படி அபிப்ராயம் சொல்லுவதை நாம் பொருட்படுத்தவில்லை யெனினும் தொழிலாளர் இயக்கத்தில் பிளவு உண்டுபண்ணுவதில் கைதேர்ந்த பேர்வழிகள் யார் என்பதை மட்டும் நாம் இதுசமயம் எடுத்துக்காட்ட கடமைப்பட் டிருக்கிறோம்.

தங்களின் கட்சி ஆதிக்கத்திற்காக தொழிலாளர்களைபயன்படுத்த தொழிற்சங்கங்களிலே பிளவு உண்டு பண்ணியது; இன்றுகூட சில தொழிற்சங்கங்களிலே பிளவை உண்டுபண்ண முயற்சிப்பது ஆகிய காரியங்களில் 'அபார' திறமை படைத்தவர்கள் கம்யூனிஸ்டுகள்தான்! இன்னும் சொல்லப்போனால் தொழிலாளர் இயக்கத்திலே இருந்து வந்த கட்டுப்பாடும் அத்தொழிலாளர்களின் மகத்தான சக்தியும் சிதைவுற்றது கம்யூனிஸ்டுகளின் தலையீட்டால்தான என்று கூறினும் மிகையாகாது.

இவ்வாறாக தொழிலாளர் சக்தியை கூறுபோட்டு அதன் மூலமாக தங்களின் அரசியல் திருவிளையாடல்களை நடத்திவரும் கம்யூனிஸ்டுகளின் போக்கினைத் திருத்தவும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நின்று தங்களின் உரிமைக்காக பணியாற்றும் வழிவகைகளையே தி. மு. கழகம் செய்ய திட்டமிட்டுள்ளது.

அத்துடன் வெறும் கூலி உயர்வு பிரச்னை மட்டுமின்றி நம்நாட்டுத் தொழில் வளங்களெல்லாம் எதன் பேராலும் எவராலும் சுரண்டிச் செல்ல இனி அனுமதிக்கக் கூடாத வகையில் பொருளாதாரத்தை உயர்த்தும் முறையிலும் தி. மு. கழகம் தொழிற்சங்கத் துறையில் பணியாற்ற எண்ணியிருக்கிறது.

எனவே, தி. மு. கழகம் தொழிற்சங்கத் துறையில் பணியாற்றுவதென்பது தொழிலாளர் சக்தியைப் பிளவுபடுத்தி "அரசியல் ஸ்டண்ட்" அடித்து வரும் கம்யூனிஸ்டுகளின் போக்கினைத் திருத்தவும்—தொழிலாளரிடையே கட்டுப்பாடான ஒற்றுமையை நிறுவுவதற்கேயாகும்.

இந்த உண்மையை—தி மு. க வும் தொழிற் சங்க இயக்கமும் என்று கலைப்பிட்டு ஆருடம் கணிக்க வந்த அவசரக் குடுக்கைகளான கம்யூனிஸ்டுகள் உணர்ந்து தெளிவு பெறுவார்களாக.

—நக்கீரன்

முதல் பக்கத்—தொடர்ச்சி

உள்ளதைக் கேட்டால் உடம்பெரிச்சலா?

குறுகிய மனப்பான்மையாம்! துவேஷ எண்ணமாம்!

மையில் வாழும் மார்க்கம் ஏற்படும். எனவே தென்னாடு வடநாடு என்ற துவேஷத்தை திராவிட இயக்கத்தினர் வளர்த்து வருகின்றனர். இத்தகைய போக்கினை அடக்கியாக வேண்டும் என்று கூப்பாடு போடுபவர்கள் யாராயிருப்பினும் அவர்கள் இனியாகிலும் தங்களின் அறிவை தென்னாட்டைப்பற்றிய நல்வாழ்வில் செலுத்தி தெளிவு பெற வேண்டுகிறோம்.

இந்நிலையில் டெல்லி ஆட்சியினரின் ஐந்தாண்டு திட்டத்தில் இதுவரை நிறைவேற்றப் பட்டுள்ளவைகளில் சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டாக குறிப்பிடவும் விரும்புகிறோம்.

ஹீராகுட் அணைக்கட்டுகள்
தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம்
பக்ரா—நங்கல் திட்டம்
கோசி அணைக்கட்டுத் திட்டம்
கோய்னா திட்டம்
சம்பால் திட்டம்
ரிஹாண்ட் திட்டம்
சிந்திரி எரு உற்பத்திச்சாலை
டி. டி. டி. தொழிலகம்
நீப்பா பேப்பர் தொழிற்சாலை
சித்தரஞ்சன் இன்சின் தொழிற்சாலை
உத்திரபிரதேசத்தில் சிமிட் தொழிற்சாலைக்குப் பாதுகாப்பு
சிர்பூரில் காகித தொழிற்சாலை.
பிலாயில் இரும்பு தொழிற்சாலை நிறுவ முஸ்தீபு

இன்னும் இதுபோன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும், நடை முறையிலும் இருந்து வருகின்றன—அங்கே!

இங்கே — தென்னாட்டில் டெல்லி ஆட்சிபீடத்தின் ஐந்தாண்டுத் திட்டம் சாதித்த தென்ன!

கீழ்பவானி—மலம்புழா அணைக்கட்டு திட்டங்களும் இனி செய்ய யிருக்கும் வைகை அணைக்கட்டு திட்டத்தைத் தவிர குறிப்பிடத்தக்கதாக சொல்ல என்ன யிருக்கிறது! இன்னும் சொல்லப்போனால் வடநாட்டிலே நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களுக்கு நூறு கோடி கணக்கிலேயும் தென்னாட்டில் நிறைவேறியுள்ள இந்த இரண்டொரு திட்டங்கள் சில கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வித ஓரவஞ்சனையைத் தட்டிக் கேட்டால் அது துவேஷமா! குறுகிய மனப்பான்மையா! அல்லது ஆட்சிபீடத்தின் அதிகாரம் நம் கையிலே சிக்கிவிட்டது என்று கருதி—வெள்ளையர் ஆட்சி மாடலிலே வடநாட்டை வளப்படுத்தி தென்னாட்டை அதனின் வியாபாரச் சந்தையாக ஆக்கிவரும் நடவடிக்கைகள், ஆட்சிமுறை ஆகியவைகள், குறுகிய மனப்பான்மையும் துவேஷமுமுடையதா என்பதை இத்தருணத்திலாகிலும் தென்னாட்டு மக்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டியது இன்றியமையாததாகும்.

இதனை நினைவூட்டவே — திராவிட முன்னேற்றக் கழகம் 20-3-55-ம் நாள் நாடெங்கும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளை நடத்தி வடநாட்டு ஏகாதிபத்யத்தின் சுயரூபத்தை மேலும் விளக்க முனைந்துள்ளது.

அன்று 20-3-55 நாடெங்கும் நடைபெறும் இக்கூட்டத்தில் தென்னாட்டு மக்கள் அனைவரும் கட்சி வேறுபாடின்றி கலந்து கொண்டு நம் மாநிலத்தின் எதிர்கால நல்வாழ்வை நிர்மாணிக்கும் வழிவகைகளுக்கு ஆதரவுதர வேண்டுகிறோம்.

தங்களுடைய சொந்த சுயநலத்துக்காகவும், அரசியல் துறையிலே நம்நாட்டைப் பற்றி அக்கறை யில்லாமல் வெளிநாடுகளுக்கு அரசியல் தரகர்களா யிருந்து கொண்டு வாயளவில் தீவிரம் பேசித்திரியும் வடநாட்டு முதலாளித்துவ ஏஜெண்டுகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த நடவடிக்கைகள் குறுகிய மனப்பான்மை யுடையதாகவும். உலகாயுகத்துக்கு மாறுபட்டதாகவும் இருக்கவாமே யன்றி. திராவிடத்தை தாயகமாகவும். பிற மாநிலங்களை நேசமனப்பான்மையுடன் சகோதரர் சமத்துவமாக மதிக்கும் பண்பும், அதுபோலவே உலக நாடுகளுடன் திராவிடமும் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமென்ற அரசியல் தன்மானமும் ஆர்வமுமுள்ள அனைவருக்கும் தி. மு. கழகத்தின் கொள்கைகள் மனதார ஏற்கக் கூடியதாயிருக்கும் என்பதில் நமக்கு உறுதியான நம்பிக்கையுண்டு.

எனவே 20—3—55-ம் நாளன்று நாடெங்கும் நடைபெறப் போகும் ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

—என்விமோகன்

இலங்கை

இராமநாதபுரம் மாவட்டம் செவ்வூர் சன் கோட்டை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் [இலங்கை] ஆண்டும் பொதுக்கூட்டம் கடந்த 3—3—55 வியாழக்கிழமை கொள்ளுப்பட்டி காலி ரோட் 510/4 இலக்க இல்லத்தில் தலைவர் அ. சே. வேல் தலைமையில் நடைபெற்றன.

தலைவர் முன்னுரைக்குப்பின் செயலாளர் பொருளாளர் ஆகியவர்களால் கடந்த ஆண்டு அறிக்கை வரவு-செலவு கணக்கு சமர்ப்பிக்க சபை ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆண்டு விவாத அரங்கில் எஸ். வீ. இராமச்சந்திரன் எஸ், எம். துரைசாமி க. மு சுப்பையா, சு மாதவன், சி வீரவாதன். க. சிவானந்தம், ரா. சா. பொன்னம்பலம், கே. டி. இராமநாதன், எம். எஸ். அழகையா ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள்.

கீழ்க்கண்டவர்கள் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டது.

தலைவர் அ. ச. வேல், துணைத்தலைவர் கே. டி இராமநாதன், இணைச்செயலாளர்கள் க. சிவானந்தம், ரா. சா. பொன்னம்பலம், பொருளாளர் சு. மாதவன்.] கமிட்டி உறுப்பினர்கள் எஸ். கே. மாயகிருஷ்ணன், எம். எஸ். அழகையா, கே. கே. சுப்பையா, வீ. எம். அழகேசன், எஸ். எம். துரைசாமி, எஸ். கே. முத்தையா, எம். இலட்சமணன், எஸ். விஸ்வநாதன், க. நீ. ஆறுமுகம் ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழகம் செல்லும் திரு க. மு. சுப்பையா, அவர்களுக்கு பிரியாவிடை கூறப்பட்டது. தலைவர் அ. ச. வேல் அவர்களின் தேநீர் விருந்துடன் செயலாளர் பொன்னம்பலம் அவர்களின் சிறப்புரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

பந்தநல்லூர்

4-3-55 வெள்ளி மாலை 5 மணிக்கு தோழர் மணவழகன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சி. பி. சிற்றரசு அவர்கள் கழகக் கொடி ஏற்றுவித்து சமுதாய முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்ட நீண்டதொரு சொற்பொழிவாற்றினர். கூட்டத்திற்குப்பின் நாடகத்தடைச் சட்டத்தை கேலிசெய்து 'இது சரியா!' என்ற ஒலி நாடகம் நடத்தப்பட்டது.

பம்பாய்

பம்பாய் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பொறுப்பு மாற்றுக் கூட்டம் 9-3-55 ஞாயிறு பிற்பகல் 2 மணி யளவில் தாராவி குடியரசு நிலையத்தில் தோழர் கா. தர்மராசன் தலைமையில் நடைபெற்றது. வரவு-செலவு கணக்கு படித்துக் காண்பித்து பொறுப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. தோழர் எஸ். வள்ளிநாயகம் கழக வளர்ச்சி குறித்து பேசினார்.

இறுதியாக துணைச்செயலாளர் ஆரியசங்காரன் நன்றிநவில கூட்டம் இனிது கலைந்தது.

பம்பாய் மாவட்ட தி. மு. கழகம்

பம்பாய் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் 20—2—55 மாலை 7-மணிக்கு தாராவி குடியரசு நிலையத்தில் தானா தி. மு. க. பிரதிநிதி தோழர் நம்பிநாராயணன் தலைமையில் நடைபெற்றது.

செயலாளராக எஸ், தியாகராசன், துணைச்செயலாளராக தோழர் யோ, தர்மராசன் (மாதுங்கா) பொருளாளராக தோழர் விக்டர் பென்னியமேன் [பாண்டுப்] தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இறுதியாக துணைச் செயலாளர் தோழர் சி. த. மு. இரா. ஆரியசங்காரன் நன்றிநவில கூட்டம் இனிது கலைந்தது.

•

தாராவி தமிழ் இலவச இரவு பாடசாலையின் ஆதரவில் தமிழ இலவச வாசகசாலை நூல்நிலையத் திறப்பு விழா மார்ச் மாதம் 6-ந் தேதி தாராவி வ. உ. சி. திடலில் நடைபெற்றது. ஆசிரியர் டி. வேதமுத்து அவர்களின் இசையுடன் விழா துவங்கியது. பம்பாய் முனிசிபல் தென்னிந்திய மொழிகள் பாடசாலையின் அதிகாரியும், இரவு பாடசாலையின் தலைவருமான சு நடராசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினர்.

பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி பொருளாளர் ஜி. பி. நாயர் அவர்கள் தலைமை வகித்து வாசகசாலையையும் நூல்நிலையத்தையும் திறந்துவைத்தார். கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த மகாராஷ்டிர வர்த்தக ஸ்தாபனத் தலைவர் எல் கே. கபூர் அவர்களும் ந. சிவபாண்டியன் அவர்களும் நூலகங்களின் பயன்கள் குறித்து பேசினர்கள். இரவுப் பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்காக ஜி. பி. நாயர் அவர்களும் எல். கே. கே. கபூர் அவர்களும் முறையே ரூபாய் 501—0—0-ம் ரூபாய் 261—0—0 நன்கொடையாக அளித்தது குறிப்பிடத்தக்கன.

முடிவில் குமாரி கதாவின் பரதநாட்டியத்துடன் ஆசிரியர் அப்புக்குட்டி அவர்களால் நன்றி கூறப்பட்டது.

ஆமதாபாத்

13-3-55-ல் ஆ. ச. தி. மு. க. செயற்குழு மாலை 5 மணிக்கு டி. பி. பாலகிருட்டினன் தலைமையில் கூடிற்று.

பொதுச்செயலாளர் அண்ணா அவர்களின் அறிக்கைப்படி மணிநகர் வட்டக்கிளை நடத்தப்போகும் ஐந்தாண்டு திட்டக் கண்டனநாள் (20-3-55-ல்) பொதுக்கூட்டத்திற்கு ஆதரவளிப்பது. 27—3—55-ல் பொது உறுப்பினர் கூட்டம் நடத்தி—நகர தேர்தலையும் கிளைத் தேர்தலையும், சமால்பூர் வட்டக்கிளைத் தேர்தலையும் நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

கைத்தறித் துணியையே
ஆதரியுங்கள்

திராவிட நாட்டுப் பிரிவினை

தோழர். சம்பத் எடுத்துக்காட்டு

திராவிடநாட்டின் விடுதலையை நாமாகவே பெற்றாலும் பெறலாம் அல்லது, வடநாட்டுக் காரர்கள் தாமாகத் தந்தாலும் தந்து விடலாம்!

தாசிகள் பற்றிய கதைகள் நீங் நிரம்பப் படித்திருக்கலாம். தாசி, ஒருவனிடத்தில் பணம் இருக்கும் வரையில்தான், என்னைத் தழுவிக் கொண்டே இருங்கள்; நீங்கள் இல்லாவிட்டால் நான் ஏது? நான் இல்லாவிட்டால் நீங்கள் ஏது? என்று ஈருடலும் ஓருயிரும் என்பது போலப் பேசுவர்; ஆனால், அவனிடமிருந்த பணம் பூராவும் பறிபோன பிறகு அவன் இனி நம் வீட்டிலிருந்தால் சோற்றுக்குக் கேடு; என்ற நிலைக்கு வரும்போது, அவனைக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளி விடுவார்கள்; அதைப் போலவே தான் ஏகாதிபத்தியங்களும்!

இன்று வடநாட்டு ஏகாதிபத்தியம், வடநாட்டைத் தொழில் வளமிக்க நாடாக்கி, அந்தத் தொழில் வளர்ச்சியினால் உற்பத்தியாகும் ஏராளமானபொருள்களுக்கு தென்னாட்டை 'மார்க்கெட்' ஆக்கி தென்னாட்டு மக்களின் செல்வத்தைச் சுரண்டி, காலாவட்டத்தில் அவர்களை ஓட்டாண்டியாக்கிவிடும்; அப்போது 'இனியும் தென்னாடு, வடநாட்டுடன் ஒட்டிக் கொண்டிருப்பதினால் பயனில்லை' என்று தெரிந்ததும் தென்னாட்டிற்கு 'விடுதலை' வழங்க முன்வரலாம்.

அதுவரையில்—நம் செல்வம் முழுவதும் சுரண்டப்படும் வரையில்—தாசிபோல, நாம் எல்லாம் பாரத புத்திரர்களல்லவா? நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? எல்லோரும் இந்தியராயிற்றே?' என்பர். நாம் ஓட்டாண்டிகளான பின், நீங்கள் ஏன் வடநாட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்கிறீர்கள்? நீங்கள் யார்? நாங்கள் யார்? என்று பேசுவர் —தாசிபோல!

எனவேதான், நாம் சற்று புத்திசாலித்தனமாக, நம்மிடம் சொஞ்ச நஞ்சம் இருக்கும் செல்வமும் சுரண்டப்படுமுன் புத்திசாலித்தனமாக வடநாட்டு ஏகாதிபத்திய அணைப்பினின்றும் விலகிக் கொள்ளவேண்டும் என்று தி. மு. கழகம் கூறுகிறது; அப்போதுதான் இந்த நாட்டு விவசாய, தொழிலாள, பாட்டாளி வர்க்க மக்கள் நலம்பெற்று, நல்ல பல திட்டங்கள் தீட்டி, தொழில் வளர்த்து, செல்வம் பெருக்கி, சுதந்திரத்துடன் வாழ முடியும். என்று தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் வேலூர் தி. மு. கழகச் சார்பில் கோட்டைவெளி மைதானத்தில் 13-3-55 ஞாயிறு அன்று நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

●

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு வேலூர் நகராட்சி மன்ற வரவேற்பு.

வேலூர் (வ. ஆ.) நகராட்சி மன்றத்தார், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களுக்கு 13—3—55 வரவேற்பு தந்தனர்.

நகர தி. மு. கழகத் தோழர்கள் நகரசபை வரவேற்பை யொட்டி நகரின் பல பகுதிகளை கொடிகளாலும், தோரணங்களாலும் அழகுபடுத்தி யிருந்தனர்.

தோழர் சம்பத் அவர்கள் நகரசபை வாயிலில் தலைவர் சீதாபதி அவர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்டார்.

அலங்கரிக்கப் பட்டிருந்த நகரசபை மண்டபத்தில் தலைவர் திரு டி. ஆர். சீதாபதி பி.ஏ., பி.எல்., அவர்கள் தோழர் சம்பத் அவர்கட்கு நகரசபை சார்பில் ஒரு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

இதற்கு முன்னர் விழாத் துவக்கத்தில் 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' என்ற திராவிட நாட்டுப் பண் இசைக்கப்பட்டது.

திராவிடப் பண் இசைக்கும் போது, விழாவில் கலந்து கொண்ட எல்லோரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தனக்கு வேலூர் நகராட்சி மன்றத்தார் அன்புடன் வரவேற்புத் தந்து பெருமைப் படுத்தியதற்காக நன்றி தெரிவித்து சீரியதோர் உரை நிகழ்த்தினார்.

இறுதியாக நகரசபை உறுப்பினர் தோழர்; எம். பி. சாரதி அவர்கள் நன்றி கூறினார்.

வரவேற்பு விழாவில் நகரசபை அதிகாரி, ஆணையாளர், நகரசபை உறுப்பினர், மற்றும் நகர உறுப்பினர்கள் எல்லோரும் குறிப்பாக காங்கிரஸ்காரர்களும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

நாட்டு வணக்கப் பாடலுடன் விழா 11-30 மணியளவில் முடிவுற்றது.

வெளி வந்து விட்டது!

"கண்மணி"

(சுவைமிக்க நவீனம்)

எஸ். எஸ். தென்னரசு

தீட்டியது

●

விபரங்கட்கு:

அருணோதயம்

சென்னை 14.

இலங்கை

இ. தி. மு. க. சேதவத்தை கிளையின் முதலாவது ஆண்டு விழா வரவு செலவு கணக்கு ள் 6—3—55ல் பி. என். சேரன் தலைமையில் கூடிய செயற்குழுவில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கணக்கு விபரம்

	ரூ. ச.
அச்சகச் செலவுகள்	44—95
ஒலிபெருக்கி ஒளி அமைப்பு	51—00
மண்டபத்திற்கு	62—00
போலீசுக்கு	15—00
அஞ்சல் செலவுகள்	16—70
போக்கு வரத்து செலவுகள்	18—76
சில்லறை செலவுகள்	21—86
	230—27
அதிகச் செலவு	60—93

இலங்கையில் இருக்கும் இந்திய பிரதிநிதி ஒரு தமிழராக நியமிக்க வேண்டுமென்று பல தீர்மானங்கள் மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை கேட்டிருந்தும் அண்மையில் தமிழரல்லாதாரை நியமித்திருப்பதை தெரிந்து இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சட்டக் கல்லூரி மாணவர்கள் மீது போலீசார் தடியடி பிறையோகம் செய்ததை இக்கூட்டம் கண்டிக்கிறது.

கவிஞர் கண்ணதாசனின் தந்தையார் இயற்கை எய்தியதை முன்னிட்டு இக்கூட்டம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

பெயர் சூட்டு விழா

தர்மபுரி மோட்டார் நிலைய தி.மு. க. துணைச்செயலாளர் எம்.பி.பழனியப்பன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் காமாட்சி அம்மையார் அவர்களுக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு 7—3—55—ல் பெயர் சூட்டுவிழா பி. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. எம். பி. சுப்பராயன் அவர்கள், குழந்தைக்கு ஆண் மகனுக்கு எழில் அரசு என்று பெயர் சூட்டிப் பாராட்டிப் பேசினார் பெயர் சூட்டு விழா அவசியம் பற்றி தோழர் தேவன் அவர்களும் தகடூர் மா.சண்முகம் அவர்களும் சொற்பொழிவாற்றினர் வந்திருந்தவர்களுக்கு தேனீர் வழங்கப்பட்டது. துணை செயலாளர் எம். பி. பழனியப்பன் நன்றி நவில கூட்டம் முடிவுற்றது. இதன் நினைவாக திராவிடன் வளர்ச்சிக்கு ரூ. 1. வரப் பெற்றோம். நன்றி—நிர்வாகி

மலையாண்டிபட்டி அம்மன் மலை ஏறி விட்டாள்!

11—3—55 வெள்ளி அன்று மாகாளி அம்மன் திருவிழாவில் அக்கினி குண்டம் வளர்த்தனர் கள். அதி[illegible] வருளாளர்கள் தான் இறங்[illegible] வேண்டுமென்று அங்கிருக்கும் ஆரியர்[illegible] கூறினார்கள். அதை எதிர்த்து [illegible] தி. மு. க. தோழர் எம். பி. மயில்சாமி அவர்கள் இறங்கிக் காண்பித்து கடவுள் சக்தி ஒன்றும் இல்லை என்று நிரூபித்தார். இதைப் பார்த்து [illegible] மக்கள் மிகவும் ஆச்சரிய முற்றார்கள்.

காதலும் கடமையும்—தொடர்ச்சி

வந்ததால் அவள[illegible] கருமை படர்ந்து காட்சியளித்தது.

"நீண்ட நேரம் காத்திருந்து களைத்துப்போயிருப்பீர்கள்! நான் என்ன செய்வது! அந்தாலையிலேயே எழுந்து புறப்பட்டேன். வழியில் ஒரு பெண்ணுக்குப் பிரசவ வேதனை என்று தகவல் கிடைத்தது. அதை கவனித்து முடித்துவர நேரமாகி விட்டது" என்றவாறே அவனை நோக்கிய சியோசிங் என்ன இது! ஒரே சேறும், இரத்தமும் என்று[illegible]

"நான் ஒன்றும் காத்திருக்க வில்லையே! இப்போது தான் நானும் வந்தேன்" என்று கூறிய சுன்செங், வழியில் நடந்தவைகள் அனைத்தையும் கூறி இரத்தம் வடியும் காதையும் காட்டினான்.

அந்தச் சமயத்தில் சிலர், அந்த நாசவேலைக்காரனைக் கட்டி இழுத்துக் கொண்டு வந்தனர். சுன்செங்கையும், சியோவையும் கண்ட மக்கள், சுன்செங் வேகமாக ஓடி வந்ததின் காரணத்தை அப்போதுதான் உணர்ந்து கொண்டனர்! அந்தக் கடமை மறவாக் காளைக்கு மக்கள் செலுத்தும் நன்றியைக் கண்டதும் அவள் உள்ளத்திலே அன்புத்தீ பற்றி எறிந்தது! ஆமாம்! அந்த அழகுச் சிலையால், மேலும் தன் காதலை மூடி வைத்துக் கொள்ள முடியவில்லை

அவளை அறியாமலே, அவளது மலர்க்கரங்கள் சுன்செங்கின் கைகளைப் பற்றின. அவளது வாய் ஒன்றுமே பேசவில்லை [illegible] தவறாக [illegible]ரின் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக்கொண்டாள் அவளை அணைத்தபடியே இன்பத்திலாழ்ந்து விட்டான், சுன் செங்

அந்த ஜீவசிலையின் [illegible] நிறக்கூந்தலின் மீது சுன்செங்கின் காதிலிருந்து வடிந்துக் கொண்டிருந்த இரத்தச் சொட்டுகள் விழுந்து, அந்தக் கருங்கூந்தலை செந்நிறமாக்க முயன்று கொண்டிருந்தது.

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1

பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 92. தெகு ஆவணி மூலவீதி; மதுரை
,, 103—1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருதுநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

கம்யூனிஸ்டுகளின் ஏகாதிபத்ய பக்தி

திராவிட முன்னேற்றக் கழகம் ஐந்தாண்டுத் திட்டம் [illegible] நாள் கொண்டாடப் போவதைக் குறித்து கம்யூனிஸ்ட்கட்சி, அதனுடைய இதழான ஜனசக்தியில் அபிப்ராயத்தை 13-3-55-ம் நாள் வெளியீட்டில் தோழர் கே. எம். கீழ்க்கண்டவாறு அறிவித்திருக்கிறார். இதிலிருந்து தென்னாட்டுத் தேசியத் தோழர்களைவிட இந்த So-Called கம்யூனிஸ்டுகள் வடநாட்டு ஆதிக்கத்திற்கு எவ்வளவு குனிந்து கொடுத்தும் துதிபாடியும், வருகின்றனர் என்பதைத் தோழர்கள் உணர வேண்டுகிறோம்.

"வட நாட்டிற்கே ஐந்தாண்டுத் திட்டம் முதலிடம் கொடுப்பதாக கூறுவது அர்த்தமற்ற குற்றச்சாட்டாகும். கிடைத்த சந்தர்ப்பத்திலெல்லாம் வடநாட்டின்மேல் துவேஷ வெறியை தூண்டச் செய்யும் ஒரு முயற்சியே தவிர வேறில்லை. இன்று காங்கிரஸ் ஆட்சியிலே போடப்படும் ஐந்தாண்டுத் திட்டம் ஒட்டு மொத்தமாக வடநாடு—தென்னாடு எங்குமுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யவில்லை. உண்மையான நிலைமை இதுதான்.

...திட்டம் போட்டு நான்காவது ஆண்டில் வடநாட்டிலும் சரி, தென்னாட்டிலும் சரி விவசாயப் பொருள் விலைவாசிகள் திடீரென்று விழ ஆரம்பித்துள்ளதே இத்திட்டத்தின் தோல்விக்கு ஒரு எடுத்துக்காட்டு. திட்டத்தின் அடிப்படையை மாற்றவேண்டியதின் அவசியத்தை இது வற்புறுத்துகிறது. தி. மு. க. இதைப்பற்றி கவலைப்படுவதில்லை.

...அடுத்து வடநாட்டில்தான் பெரிய பெரிய திட்டங்கள் போடுகிறார்கள். தென்னாட்டில் இல்லவே இல்லை என்ற வாதத்தை எடுத்துக் கொள்வோம். இரும்பும் நிலக்கரியும் இன்றுதோண்டி எடுக்கப்படும் இடத்தில்தான் ஒரு இரும்புத் தொழிற்சாலையை நிறுவ முடியும். மத்தியபாரத் பிலாய் என்ற இடத்திலும் ஒரிசாவில் ரூர்கேலா என்ற இடத்தில்தான் மேற்கூறிய வசதிகள் உள்ளன. அந்தக் காரணத்தினாலேயே அந்த இடங்களில் எஃகு தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடிகிறது.

...நிலக்கரியும் இரும்பு மூலமும் தோண்டி எடுக்கப்படும் இடங்கள் (பிலாய்-ரூர்கேலா) வடநாட்டில் இருக்கின்றன என்ற காரணத்தால் அங்கு இரும்பு தொழிற்சாலைகள் ஏற்படுத்தக் கூடாதென்று கூறுவதோ அல்லது வடநாடு என்பதால்தான் அங்கு இரும்பு தொழிற்சாலைகள் ஏற்படுத்துகிறார்கள் என்று கூக்குரலிடுவதோ அர்த்தமற்ற வெறும் துவேஷவெறி கொண்ட கூக்குரலாகும்"

மேற்கண்ட வடநாட்டு ஏகாதிபத்ய காவடிச் சிந்தைத்தான் 'ஐந்தாண்டு திட்ட கண்டன நாள்' குறித்து 'ஜனசக்தி பாடி யிருக்கிறது!

*

'ஜனசக்தி'யின் இந்த விசித்திர வாதத்திற்கு தி. மு. கழகம் பலமுறை தக்க அறிவுரை புகட்டி யிருக்கிறது. எனவே அதனுடைய கூற்றுக்கு விரிவாக பதில் தரவேண்டிய அவசியமில்லை, எனவே சுருக்கமாகவே இதற்கு பதில் தந்து கம்யூனிஸ்ட் கட்சி தென்னாட்டைப்பற்றிக் கொண்டுள்ள எண்ணத்தையும் அம்பலப்படுத்த விரும்புகிறோம்

● இரும்பும் நிலக்கரியும் ஒரே இடத்தில் இருந்தால்தான் இரும்பு தொழிற்சாலையை நிறுவ முடியும்; எனவே அந்த வசதியுள்ள வடநாட்டிலே துவக்கப்பட்டிருப்பதைப்பற்றி [illegible]றை [illegible]றலாமா யென்று வடநாட்டு முதலாளித்துவத்திற்கு வக்காலத்து வாங்குகிறது கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகை! திராவிடம் அல்லது தமிழகம் தனித்தியங்குவதாக வைத்துக் கொள்வோம் அப்போது தென்னாட்டிலே இரும்பு தொழிற்சாலையை நிறுவாமலே யிருக்க முடியுமா? நெய்வேலிக்கும் சேலத்திற்கும் இடையே 80 மைல்களிருக்கின்றன என்பதற்காக இரும்பைப்பற்றி கவலைப்படாமலிருக்க முடியுமா? நிலக்கரியைச் சேலத்துக்கு எவ்வளவு விரைவில் எடுத்துச் செல்ல முடியுமோ—அதற்கு சர்க்கார் ஆவன செய்யாமலிருக்க முடியுமா! எனவே தென்னாடு டெல்லி ஆதிக்கத்தின் பிடிப்பிலிருந்து விடுபட்டிருந்தால் நெய்வேலி நிலக்கரியை சேலத்திறகுக் கொண்டு போகும் முயற்சியில் தீவிரமாக ஈடுபடவும் அவ்வழியைச் சுலபமாக்கவும் முடியும் ஆனால் ஏக இந்தியா என்ற பிடிப்பில் தென்னாடு சிக்கியிருப்பதால், ஏற்கனவே வளமுள்ள இடங்களிலேயே தொழிற்சாலைகளை நிறுவுகிறோம். என்ற பேரால் தென்னாட்டையும் அதன் தொழில்வளத்தையும் புறக்கணிப்பது அர்த்தமற்ற செயலா அந்த அநீதியைத் தட்டிக் கேட்பது அர்த்தமற்ற செயலா என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விடுகிறோம்

பிலாய் ரூர்கேலா போன்ற வடநாட்டுப் பகுதிகளில் இரும்பு தொழிற்சாலைகள் நிறுவுவது குறித்து தி. மு கழகத்திற்கு துவேஷங் கிடையாது. ஆனால் தென்னாட்டிலுள்ள நெய்வேலி நிலக்கரியை சேலத்திற்குக் கொண்டு செல்வதில் சிறிது சிரமமிருப்பதாகவே வைத்துக் கொண்டாலும் ஏன் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற டெல்லி சர்க்கார் முன்வரக் கூடாது! தென்னாடு தனித்திருந்தால் இதைப்போன்ற முயற்சியை எளிதில் செய்ய முடியுமல்லவா! இவ்வாறு கேட்பது துவேஷவெறிகொண்ட கூக்குரலா அல்லது வடநாட்டு ஆதிக்கத்துக்குக் குனிந்து கொடுத்து துதிபாடுவது நாகரீகமான செயலா என்பதை 'ஜனசக்தி' உணரவேண்டுகிறோம்.

ஜனசக்தி—இந்த இரும்பு தொழிற்சாலையைமட்டும் உதாரணமாக எடுத்துக் காட்டி வாயடைத்துக் கொண்டது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுவரை வடநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள மற்ற விவரங்களை எடுத்துக் காட்ட பொதுவுடைமைப் போர்வையில் திருவிளையாடல்கள் நடத்திவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் வார இதழுக்கு துணிவில்லை ஏன் தெரியுமா! தென்னாட்டு மக்களின் வரிப்பணத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ ஐம்பது கோடி ரூபாய் வசூலித்துச் செல்லும் டெல்லி சர்க்கார் தென்னாட்டுத் தொழில் துறையில் கையாண்டுவரும் ஓரவஞ்சனை அம்பலத்துக்கு வந்துவிடும் என்று எண்ணியே இரும்பு தொழிற்சாலை நிறுவும் பிரச்னையை மட்டும் எடுத்துக் காட்டி தனது ஏகாதிபத்ய பக்தியைக் காட்டிக் கொள்கிறது.

'சிந்திரி' எரு உற்பத்திச்சாலை!

சித்தரஞ்சன் இஞ்சின் தொழிற்சாலை!

டி. டி. டி. தொழிலகம்!

பக்ராநங்கல்-ஹீராகுட் அணைக்கட்டுகள்!

தாமோதர் பள்ளத்தாக்குதிட்டங்கள்

கோசி அணைக்கட்டு திட்டம்

உத்திர பிரதேசத்தில் சிமிட் தொழிற்சாலைக்கு உதவி!

நீப்பா பேப்பர் தொழிற்சாலை!

சிர்பூர் காகிதத் தொழிற்சாலை!

இன்னும் விவரிக்கின் பெருகும். இவையனைத்தும் வடநாட்டிலே இதற்காக பல கோடிக் கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டிருக்கின்றன.

ஆனால் தென்னாட்டிலே ஐந்தாண்டுத் திட்டச் சாதனை என்ன! வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு வக்காலத்து வாங்கும் 'ஜனசக்தி' கூறமுடியுமா!

நிற்க — வடநாட்டு ஏகாதிபத்தியம் — ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பேரால் தென்னாட்டுக்கு செய்துள்ள ஓரவஞ்சனையை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பதைவிட காங்கிரஸ் முகாமிலே உள்ள பொறுப்பு வாய்ந்தவர்களே அண்மையில் கண்டித்திருக்கிறார்கள்.

ஆவடியில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில், வரவேற்புத் தலைவர் தோழியர் அம்புஜம் அம்மையார் — ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு கவனிக்கப்படவில்லை யென்றும் பாரபட்சமான நிலையில் நடத்தப்படுகிறதென்றும் எடுத்துக் காட்டிப் பேசியிருப்பதை தென்னாட்டு மக்கள் மட்டுமல்லாமல் அனைத்திந்தியாவிலுள்ள அரசியல் யூகம் படைத்த அனைவரும் அறிந்ததாகும்.

ஒரு திங்களுக்கு முன் கோவையில் நடைபெற்ற ஐந்தாண்டுத் திட்ட விவாதக் கூட்டத்தில் சென்னை நிதி அமைச்சர். சுப்ரமண்யம் அவர்களே ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயரால் தென்னாடு ஏமாற்றப்பட்டு வரும் விவரங்களையும் இந்நிலை நீடிக்கால் அதனால் பெரும் தீமையே விளையுமென்றும் வெளிப்படையாக எச்சரித்திருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல் இப்போதைய டெல்லி பாராளுமன்றக் கூட்டத்திற்கு முன்னைய கூட்டத்தில், இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தோழர் தேஷ்முக் அவர்களை தென்னாடு உறுப்பினர்கள் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்குப் போதிய கவனம் செலுத்தப்படவில்லை யென்பது உண்மைதானென்றும், அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இக்குறை போக்கப்படுமென்றும் பதிலளித்திருக்கிறார்.

காங்கிரஸ் மந்திரிகளே—ஐந்தாண்டுத் திட்டத்தில், நேருசர்க்கார் நடந்து கொண்டுள்ள விசித்திரப் போக்கினை ஒப்புக் கொள்கின்றனர் தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்களும் இவ்வுண்மையை உணருகுன்றனர்.

ஆனால் 'ஜனசக்தி'யின் பரந்த கண்ணோட்டத்திற்கு மட்டும் இவ்வுண்மை புலப்படவில்லை. அந்த அளவுக்கு வடநாட்டு ஏகாதிபத்தியபக்தி கம்யூனிஸ்ட் கட்சியின் கண்களை மறைத்திருக்கிறது

ஆகவே வடநாட்டின் வளப்பத்தையும் அதனின் பாதுகாப்பு—வளர்ச்சி மற்ற அனைத்திலும் கம்யூனிஸ்டுகளின் பரந்த கண்ணோட்டமும், அங்குள்ள முதலாளித்துவத்தின் எண்ணமும் ஒரே மாதிரியானதுதான் என்பதைத் தவிர—'ஜனசக்தியின்' ஒப்பாரியில் வேறென்ன அர்த்தமிருக்க முடியும்!

அதிலும் இந்திய கம்யூனிஸ்டுகளின் போக்கு—பேச்சிலே உலக வாதமும் செயலிலே அதற்கு நேர்மாறான போக்காகவும் காட்சியளித்து வருகிறது.

திரு-கொச்சியில் சர்வாதிகார ஆட்சி செய்த பட்டம்தாணுவிடம் பேரம் பேசுதல்!

அனைத்திந்திய அரசியலில், டாடா—பிர்லா—டால்மியாக்களின் ஏக போக உரிமைகளுக்கு மறைமுகமாக வாலி பாடுவது!

ஆந்திராவிலே, பிரகாசம் கோஷ்டியினரின் அணைப்பிலே கட்டுண்டுகிடப்பதும், திடீரென அந்தப் பிடிப்பிலேயிருந்து வெளியேறி படிதாண்டா பத்தினிப் பதிகம் பாடுவது!

இப்படியாக ஒரு உறுதிப்பாடான கொள்கை யில்லாமல் வெறும் வெத்து வேட்டுத்தனமான பேச்சுக்களை பேசித்திரியும் இந்த So-called கம்யூனிஸ்டுகளும் 'ஜனசக்தியும்' தி. மு. கழகம் வடநாட்டவர்மீது வேண்டுமென்று துவேஷம் கற்பிக்கவே ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் கொண்டாடுகின்றனர் என ஊளை யிடுகின்றன!

திராவிட முன்னேற்றக்கழக வளர்ச்சி இந்த So-Called கம்யூனிஸ்டுகளின் வயிற்றைக் கலக்குகிறது போலும்! பரிதாபம்! பரிதாபம்!

—நக்கீரன்

●

மாப்படுகை

தி. மு கழக மூன்றுவது ஆண்டு விழா 6—3—55 ஞாயிறு மாலை 5 மணிக்கு வெட்டாறு மணற்பரப்பில் நடைபெற்றது. சித்தக்காடு கே. இராமையா தி. மு. கழகத்தின் குறிக்கோள் பற்றி தலைமை உரையில் விளக்கினார். தோழர்கள் கலியமூர்த்தி, சிகாமணி இயக்கப் பாடல்கள் பாடினர்,

தோழர்கள் டி. ஏ. ராமசாமி, கல்யாணம் ஆகியோர் தி மு கழக கலை நிகழ்ச்சி நிகழ்த்தினர். பின்னர் தோழர்கள் கே. எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கூட்ட ஆரம்பத்தில் சித்தக்காடு இராமையா அவர்களின் செல்வன் "மெய்ப் பொருள்" என்ற ஐந்து வயது சிறுவன் திராவிட நாட்டுப்பண்பாடியது குறிப்பிடத்தக்கது தோழர் சண்முகம் நன்றி கூறினார்

ஜீவசக்தி லேகியம்

எக்காரணத்தாலேனும் ஆண் அல்லது பெண் இழந்துபோன தேக வலுவையும், சுக்கில சுரோனித போஷாப்பையும் திரும்பவும் பெற விரும்பினால் இந்த லேகியத்தை உட்கொண்டால் குணமடையலாம். போஷாப்பிற்கு உரிய ஜீவாதாரமான பெருமருந்துகள் இதில் சேர்ந்திருக்கின்றன. இந்த லேகியத்தை காலை மாலை 40-நாட்கள் ஆண் அல்லது ஒரு பெண் சாப்பிட்டால் அன்னுடைய சரீரம் முற்றிலும் மாறி சுந்தரதேகம் பெறுவார்கள். எந்த மருந்தினாலும் தீராத துரித ஸ்கலிதம்—சொப்பன ஸ்கலிதம் நீங்கி நீடித்த இன்பம் எய்துவார்கள்.

20-நாள் காலை, மாலை சாப்பிடக்கூடிய லேகியம்	
டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0
பாக்கிங், தபால் சார்ஜ், மணிஆர்டர் கமிஷன்	1—6—0
40-நாள் காலை, மாலை சாப்பிடக் கூடிய லேகியம்	
டப்பி 1-க்கு வி ரூ.	6—0—0
பாக்கிங் சார்ஜ், தபால் சார்ஜ், மணியார்டர் கமிஷன்	1—11—0

என். பி. செல்வம் & கோ.

16, கிலையன்ஸ் ரைஸ் மில் தெரு, சென்னை—1

குடந்தையில் மீண்டும் ராதா குழுவினர்

●

நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் தமது குழுவினருடன் 8—3—55-ந் தேதி நடத்திய நாடகத்தின் ஒரு காட்சியில் 'மயில் ராவணன்' நடனமும் சேர்க்கப்பட்டிருந்ததாம். நாடகத்தின் பிற்பகுதியில் காட்டப்பட்ட மயில்ராவணன் நடனத்தைக் கண்ட சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் உள்ளூர் போலீஸ் அதிகாரிகளிடம் தெரிவித்ததாகவும் அவர்கள் உடனே கொட்டகைக்குள் புகுந்து ராமன் வேடத்திலே யிருந்த நடிகவேள் ராதா அவர்களையும் அவரது சகா நடிகரான சத்தியமூர்த்தியையும் கைது செய்ததோடு, குடந்தையிலேயே நாடகம் நடத்தக் கூடாது என்றும் குடந்தையைவிட்டு உடனே வெளியேற வேண்டுமென்றும் குடந்தை மாஜிஸ்ட்ரேட்டால் உத்திரவு

பிறப்பிக்கப்பட்டது. எனவே 8—3—55 நாடகம் முடிவின்றி கலைந்தது. அடுத்தநாள் ராதா அவர்களை ஜாமீனில் விடுதலை செய்தனர்.

உடனே இந்தத் தடை உத்திரவை எதிர்த்து, நடிகவேள் ராதா அவர்கள் உயர் நீதி மன்றத்தில் மனுசெய்துக் கொண்டார். இதற்கேற்ப நீதிபதி பஷீர் அகமத் அவர்கள் குடந்தை மாஜிஸ்ட்ரேட் பிறப்பித்த தடை உத்திரவை அமுலாக்காமல் நிறுத்தி வைக்குமாறு உத்திரவிட்டார்.

இதற்குப் பிறகு நடிகவேள் எம். ஆர். ராதா அவாகள் குடந்தை மீனுட்சி தியேட்டரில் தமது நாடகங்களை தொடர்ந்து நடத்தி வருகிருர். அவர் நடத்தும் நாடகங்களில் ராமாயணம், லவகுச, மயில்ராவணன் ஆகிய காட்சிகள் இடையிடையே நடத்தப்படுவதாகவும் தெரிகிறது. தினசரி ஏராளமான பொதுமக்கள் நாடகங்களைக் கண்ணுற்று ரசித்து வருகின்றனராம். இதுவரை யாதொரு கலவரமோ அல்லது எதிர்ப்போயின்றி வெற்றிகரமாக நடிகவேள் ராதா குழுவினரின் நாடகங்கள் நடைபெற்று வருகின்றன.

ராதா அவர்கள் கொண்டுள்ள கொள்கைப் பற்றும் வீண் கலவரங்களைக் கண்டு அஞ்சாமலும் அதேசமயத்தில் அமைதியை இழக்காமலும் முதலாவதாக நீதிமன்றம் மூலம் தனது உரிமைக்கு வழி தேடி நிற்கும் முறையான உறுதியையும் குடந்தைப் பொதுமக்கள் பெரிதும் பாராட்டுகின்றனர்.

18—12—54-ல் திருச்சியில் நடிகவேள் ராதா அவர்கள் ராமாயண நாடகத் தடையை எதிர்த்ததின் காரணமாக சர்க்காரால் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் திருச்சியில் சிறைக் காவலில் வைக்கப்பட்டு, பின்னர் சர்க்காரே நிபந்தனையின்றி விடுதலை செய்தனர்.

●

அவ்வை புரடக்ஷன்ஸ்

ரத்தபாசத்தை திரைப்படமாக்கி தமிழகத்தின் பாராட்டுதலுக்கு உரித்தான அவ்வை புரடக்ஷன்ஸ், "யார் பையன்" என்னும் படத்தை தயாரிக்கப் போவதாகவும் தோழர் கே. ராம்னுத் இப்படத்தை டைரக்ட் செய்வார் என்றும் நடிகர் தேர்வு விரைவில் முடிந்துவிடுமென்றும் தெரிகிறது.

இசைத்தென்றல்

சென்ற 22—2—55-ல் காயல்பட்டினம் சென்ட்ரல் ஹையர் எலிமெண்டரி பாடசாலை 22-வது ஆண்டு விழாவில் தலைமை வகித்த சென்னை முதல் அமைச்சர் கனம் காமராசர் அவர்களால், பள்ளி மாணவர்கள் நடத்திய "சட்டத்தின் முன்" என்ற



நாடகத்திற்கு தலைமை தாங்கிய **திருச்சி லோகநாதன்** அவர்களுக்கு தென்னுட்டுத் திலகர் டாக்டர் பி. வரதராசலு நாயுடு எம்.எல்.ஏ. அவர்கள் முன்னிலையிலும்; மக்களின் பேராதரவிலும் "இசைத்தென்றல்" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் கூட்டங்களும் பிற நிகழ்ச்சிகளும்.

சென்னை

20-3-55 மாலை 5-30 மணிக்கு அயன்புரம் மார்க்கெட் திடலில் மாபெருங் கூட்டம் நடைபெறும். தோழர் கே. ஏ. மதியழகன் மற்றும் பலர் பேசுவர்.

மதுரை

20-3-55 மாலை 6-மணிக்கு திலகர் திடலில் தோழர் எஸ். முத்து தலைமையில் ஈ. வி. கே. சம்பத். எஸ். அப்பாவு பேசுவர். மாலை 4-மணிக்கு மதுரை நகர் தி. மு. க.கட்டிடத்திலிருந்து ஊர்வலலம் புறப்படும்

திருச்சி

20-3-55 மாலை 6-மணிக்கு டவுன் ஹால் திடலில் தோழர் எஸ். ஜி. கிருஷ்ணன் தலைமையில் என். வி. நடராசன், என். எஸ். இளங்கோ, ஐ. எம். ஷெரீப் பேசுவர்.

கோயமுத்தூர்

20—3—55 மாலை 6-மணிக்கு கோவை பூங்காவில் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். ஏ. ராசமாணிக்கம் பேசுவர்.

மாயூரம்

20-3-55 மாலை கூறைநாடு கடைவீதியில் தோழர் பி. எ. சுபகரன் தலைமையில் முகவை ஆர்.எஸ். பாண்டியன், டி.எ. ராமசாமி, என். கிட்டப்பா ஆகியோர் பேசுவர்.

குடியேற்றம்

20—3—55 மாலை ஆற்றுத் திடலில் கு.சி. பொன்னுசாமி தலைமையில் அருப்புக்கோட்டை எம். எஸ். ராமசாமி பேசுவார்.

முடீஸ் (வால்பாறை)

20-3-55 மாலை 4-மணிக்கு வால்பறை திடலில் தோழர்கள் அ. ச. பாலு க. துரைக்கண்ணன், க. நெடுஞ்செழியன் பேசுவர்.

போளூர் (வ.ஆ.)

20—3—55 மாலை 6 மணிக்கு பழைய பஸ் நிலையத்தில் வி. எ. நடராசன் தலைமையில் ஏ. கோவிந்தசாமி எம். எல். எ., வேலூர் கருத்தோவியன், போளூர் கே. சுப்ரமண்யம் பேசுவர்.

சென்னை பெத்துநாயக்கன்பேட்டை

20—3—55 காலை 9-மணிக்கு லாயர் சின்னத்தம்பி முதலி தெருவிலிருந்து கண்டன ஊர்வலம் தோழர் வி. எஸ். கோவிந்தராசன் தலைமையில் நடைபெறும்.

பம்பாய்

20-3-55 மாலை 6-30மணிக்கு தாராவி வ. உ. சி. திடலில் சி. த. மு. இர. ஆரியசங்காரன் தலைமையில் தோழர்கள் த. மு. பொற்கோ, தனிக்கொடி, புத்தாசு, எஸ். வள்ளிநாயகம், சண்முகம் பேசுவர்.

ஆமதாபாத்

20—3—55 மாலை 5-மணிக்கு மணிநகர் சால் திடலில் கண்டனக் கூட்டம் நடைபெறும். கழகத் தோழர்கள் பலர் பேசுவர். நரோடாவிலிருந்து சைகிள் ஊர்வலமும் நடைபெறும்.

குரும்பேரி (வ. ஆ.)

தி. மு. கழக ஆதரவில் 21—3—55 திங்கள் மாலை 7-மணிக்கு ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் கூட்டம் மஜீத் பந்தலில் நடைபெறும். தோழர் கு. மு. செங்கல்வராயன் தலைமையில் என். வி. நடராசன் மற்றும் பலர் பேசுவர்.

இராயநல்லூர்

தி. மு. கழக முதலாவது ஆண்டுவிழா 26—3—55 மாலை 4 மணிக்கு வ. உ. சி. திடலில் நடைபெறும். தோழர் கே. ராமு தலைமையில் என். வி. நடராசன், எல். என். ராமலிங்கம், கே. ரஹ்மத்துல்லா, இரா. பாலகுருசாமி ஆகியோர் பேசுவர்.

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

17—3—55 வியாழன் மாலை 5-மணிக்கு இராயபுரம் அறிவகத்தில் சென்னைமாவட்ட தி. மு. கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் 27-3-55-ம் நாள் நடைபெற யிருக்கும் கிளைக் கழகத் தேர்தல் பற்றியும் மற்ற விஷயங்களையும் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் தவருது வருமாறு கேட்டுக்கொள்கிருேம்.

கே. எம். கண்ணபிரான், செயலாளர்